# காஞ்சி

20 காசு

0-7-69 நிறுவனர்: அண்ணதுரை

6 1

## உள்ளே....

★

இயற்கை
கொஞ்சுகிறது!
இல்லாமை
கொட்டுகிறது!!
(மடல்)

பரபரப்பு
தேவைதானு ?
(தலையங்கம்)

காங்கிரஸ்-
காப்பாற்றப்படுமா?

கேட்டீரா சேதி?

கேள்வி-பதில்



# கேட்டீரா சேதி!

"காஞ்சி" இதழ் என்றாலே 'ஜனசக்தி'க்கு தீயைத் தொடுவதுபோல இருக்கிறது என்று தெரிகிறது. அமரராகிவிட்ட அறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்டதுதான் 'காஞ்சி' என்பது, 'ஜனசக்தி' நாட்டுக்கறிவித்துதான். இனி தெரியப்போகிற விஷயமல்ல. 'காஞ்சி' இதழில் வருகின்ற எந்த அரசியல் விமர்சனங்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் என்றுமே முரண்பட்டிருந்ததில்லை. இனியும் இருக்கவேண்டிய அவசியமுமில்லை. திராவிட முன்னேற்றக் கழகம், இந்த நாட்டு விவசாயப் பெருங்குடியினரை உணவுத் துறையைப் பொறுத்த மட்டில் எப்படி அதன் முதுகெலும்பு என்று கருதி மதிப்பளிக்கிறதோ, அப்படித்தான் தொழில்துறையின் முதுகெலும்பு போன்றவர்கள் தொழிலாளர் என்றும் கருதி செயல்பட்டும் வருகிறது. ஜனசக்தியின் பழுதுபட்ட கண்களுக்கு வேண்டுமானால், குதர்க்கப் புத்திக்கு வேண்டுமானால் குறைபாடாகத் தோன்ற முடியுமே அல்லாது, தொழிலாளர் சமுதாயத்துக்கு அது தோழமையுடையது என்பது வெள்ளிடைமலையானது. கம்யூனிஸ்டு தொழிற்சங்கத்தின் முதல் திட்டமே, நிருவாகத்துடன் முழுமையாக ஒத்துழைப்பது என்பதும், தகராறுகளைக் கிளப்பாமல் உரிமையை நிலைநாட்டிக்கொள்ள முயல்வதுதான் என்றும் அது அறிவித்துவிட்டு, 'காஞ்சி' ஏதோ, தொழிலாளர்களுக்கு முரணாக கருத்தறிவித்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறது. உண்மையிலேயே இந்த நாட்டுத் தொழிலாளர் வர்க்கம் உருப்படியான சில நன்மைகளை அடைய முடியுமானால், தமிழகத்தின் பொற்காலம் என்று மதிப்பிடப்படும் கழக ஆட்சியின் காலத்திலேதான் அது முடியுமே ஒழிய, கம்யூனிஸ்டுகளால் முடியுமென்பதற்கு, கேரளாவும், மே. வங்கமும் பதில் சொல்லவில்லை. மொத்தத்தில் தொழில் துறையில் தொழிலாளர்க்கிடையே ஒரு கசப்புணர்ச்சியினை வளர்த்துவிட்டது என்றே நம்ப இடமுண்டு. அதுதான் இன்றைக்குப் பெரும்பாலும் அமைதியற்றநிலையைத் தோற்றுவித்துள்ளது. இதனை மூடி மறைக்கவே 'காஞ்சி'யின்மேல் பழியைப் போட்டு, பிரச்னையை திசை திருப்பிவிட முயன்றிருக்கிறது ஜனசக்தி. தொழிலாளர்களின் பேரால், யார் தொழிலாளர் சமூகத்துக்கு மாசுண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு தஞ்சை மாவட்டமே சான்று கூறும். எதிர்காலம் இந்த உண்மையை அப்பட்டமாக வெளிப்படுத்தத்தான் போகிறது. இதற்காகக் 'காஞ்சி'யின்மேல் காய்வது ஏனோ?

• • •

இந்த இதழ், உங்கள் கரங்களுக்குக் கிடைக்குமுன், அல்லது கிடைக்கின்ற அன்று, நிலாத் தடத்தில் மனிதனின் காலடிபட்டிருக்கும். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் நிலா அல்லது சந்திரனைப் பற்றிய புராணக் கதைகள் மலிந்து கிடக்கின்றன. இப்போதோ இந்த புதிய சாதனை மூலம், உலகெங்கும் விரவிக் கிடக்கின்ற மூடக் கருத்துக்கள் அகற்றப்படுவது மட்டுமல்லாமல், விஞ்ஞான வழியில், பலப் பல புதிய சிந்தனைகளையும், முடிவுகளையும் பெற வழியுண்டாகிறது என்றும் கருதி மகிழவேண்டும். மனித முயற்சியிலேயே—சாதனையிலேயே- இதுவரையிலானதை விட இப்போது நடைபெறும் இந்த சாதனைதான் தலைமையதாகவிருக்கும். இது எளிதாக்கப்படும்போது இது அற்பமானது என்று கூறத்தக்க காலம் வந்தாலும் வியப்பதற்கில்லை.

• • •

இதுவரையில் பதவியில் இருந்த எல்லா குடியரசுத்தலைவர்களும், காங்கிரசைக் காட்டிக் கொடுத்து வந்திருப்பதாகவும், இது முறைகேடானது என்றும், காங்கிரஸ் தலைமையின் சர்வாதிகாரப் போக்கிற்கு உடன் பட்டிருக்கவில்லையென்றும், அதனால் நாட்டுக்குத் துரோகம் புரிந்துவிட்டார்கள் என்றும் 'நவசக்தி' என்ற, காங்கிரஸ் பத்திரிகைதான் என்று அந்தக் கட்சியின் தலைமையினரால் ஒப்புக்கொள்ளாத ஒரு பத்திரிகையில் 'கவிஞர்' என்ற அடைமொழியை யொட்டிக்கொண்டு கோப்பைக்குள் குடியிருக்கும் ஒருவர் செய்தியொன்றை, கட்டுரை வடிவில் தந்திருக்கிறார். அதோடு, அந்தச் செய்தியில், இனிமேல் குடியரசுத்தலைவர் பதவிக்கு வருபவர்கள் யாராயிருந்தாலும் பச்சை காங்கிரசுக்காரராகத்தானிருக்க முடியும்—இருக்கவேண்டும் என்ற தம் தீர்ப்பையும் வெளியிட்டு, கூடவே, இப்போது வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கும் சஞ்சீவி ரெட்டி, அசல் காங்கிரஸ்காரர்தான் என்றும், அவர் பதவியில் அமர்த்தப்படுவதன் மூலம்தான் காங்கிரஸ் காப்பாற்றப்படமுடியும் என்றும் உண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார். பிரதமர் இந்திராவுக்குக்கூட தெரியாத—புரியாத உண்மைகளை இவர் தெரிவித்திருக்கிறார். சஞ்சீவி ரெட்டி–கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர் என்று அந்த கவிஞர், கால் தொட்டு வணங்கும் காமராசர் தகவல் தந்து 48 மணி நேரம் கூட முடியவில்லை. அதற்குள் கவிஞரின் செய்தி இது. கவிஞரின் செய்தி உண்மைதான் என்பதைப்போலவே, வேட்பாளர் சஞ்சீவி ரெட்டியும், தான் காங்கிரஸ்காரர்தான் என்றும், காங்கிரசுக்குச் செய்த சேவைக்குக் கிடைத்ததே இந்தப் பதவி என்றும் பெருமிதத்தோடு சொல்லியிருக்கிறார். இந்திய ஜனநாயகத்தை எண்ணிச் சிரிப்பதா? அழுவதா? சொல்லுங்கள்!

• • •

வேலையில்லாமலிருக்கும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை சம்பந்தமான விவரங்களைச்சேகரிக்க தமிழ்நாடு சர்க்கார் முடிவுசெய்திருக்கிறது. பெயர், விலாசம், சொந்தஊர், தாய்மொழி, பிறந்த தேதி, கல்வித் தகுதி, முந்தைய உத்தியோகம், வேலை தேடித் தரும் நிலையத்தில் பதிவு செய்தவிவரம் ஆகியவற்றைத் தெரிவிக்குமாறு ஹையர் கிரேடு, ஜூனியர் பேசிக் கிரேடு, செகண்டரி கிரேடு, சீனியர் பேசிக் கிரேடு பயிற்சி பெற்ற ஆசிரியர்களையும், பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களையும் தகுதி பெற்ற தமிழ் பண்டிதர்களையும், தகுதி பெற்ற உடற்பயிற்சி ஆசிரியர்களையும் பள்ளி கல்வி டைரக்டர் எம். டி. பால் அறிவிப்பு ஒன்றில் கேட்டுக்கொண்டிருக்கிறார். விவரங்களை ஜூலை 25க்கு முன்னதாக பள்ளி கல்வி உதவிடைரக்டருக்கு (ஆரம்பகல்வி) அனுப்பவேண்டுமாம். இத்தகைய ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கச் செய்யும் சாத்யக் கூறுகளை ஆராய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். பல ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் வேலையில்லாமலிருப்பதாக அதிகாரப் பூர்வமற்ற வட்டாரங்கள் மதிப்பிடுகின்றன.

★

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 6 | 20—7—69 | இதழ் 1

# பரபரப்பு தேவைதானா?

இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்கு, காங்கிரசுக் கட்சியின் பாராளு மன்றக் குழுவே, வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பது என்பது பின்பற்றப்பட்டு வந்த மரபேயானாலும், இந்த முறை, போர்டு அறிவித்த வேட்பாளர் பற்றி எழுந்த சர்ச்சைகளும், பின் விளைவுகளும், துணைப் பிரதமரும், நிதியமைச்சருமாகிய திரு. மொரார்ஜி தேசாய், தம் பதவியினை விட்டு விலகி விடக்கூடிய அளவுக்கு விசுவரூபம் எடுக்கும் என்று எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

நாடாளு மன்ற அவைத் தலைவராக இருந்து கொண்டிருக்கும் திரு. சஞ்சீவ ரெட்டியைப் போர்டு தெரிந்தெடுத்ததும், உணவு அமைச்சராக விருக்கும் ஜெகஜீவன்ராமைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பிரதமர் விரும்பியதும்—நடக்கவே கூடாதன அல்ல.

ஆனால், பெங்களூரில் விளைந்த இந்த அசம்பாவிதங்கள், டில்லியையும், அதன் மூலம் இந்தியத் துணைக்கண்டத்தையும் இப்படி ஒரு குலுக்கு குலுக்கி விட்டிருப்பதைத்தான் வருத்தத்துடன் கண்டிக்க வேண்டியிருக்கிறது.

திரு. மொரார்ஜி தேசாயிடமிருந்த நிதித் துறை, திருமதி இந்திரா காந்தியினால் பறிக்கப்பட்டது என்பதற்கும், குடியரசுத் தலைவருக்கான வேட்பாளர் தேர்வு என்பதற்கும், தொடர்பில்லை என்று எவரெவர் எப்படி எப்படிக் கூறினாலும் வெளிப்படையாக வெடித்து வந்துள்ள உண்மையினை மறுத்துவிட முடியாது.

நிதித்துறைப் பொறுப்பினை தாமே ஏற்றுக்கொண்டதாகவும், அப்பொறுப்பிலிருந்து திரு. தேசாயை விலக்கி இருப்பதாகவும் தகவல் கிடைத்தவுடனேயே, பதில் நடவடிக்கையாக தேசாய், தாம் வகித்துவந்த துணைப் பிரதமர் பதவியையும் ராஜினாமாச் செய்திருப்பதானது, தேசாயின் பதிலடி என்றே வருணிக்கப்படுகிறது.

செய்தியாளர்களது வினாவொன்றுக்குப் பதில் தரும்போது தேசாய், பிரதமருக்கும், சக அமைச்சர்களுக்குமிடையே சுமுக நிலைஇல்லாத தன்மையினை சூசகமாகத் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

பிரதமரது அண்மைக்கால நடவடிக்கைகள் பெரும்பாலும் தன்னிச்சைப்படி அரசை நடத்திச் செல்லும் பாங்கிலேயே அமைந்திருக்கிறது என்பதனையும் மறைமுகமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார் தேசாய்.

பிரதமர் விரும்புவதெல்லாம், இனிமேலும் வெறும் வார்த்தைகள் மூலமாகவும், முழக்கங்கள் மூலமாகவும், தீர்மானங்கள் மூலமாகவும் மட்டுமே மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கமுடியாது; ஏதாவது உருப்படியான செயல் திட்டங்களை நடைமுறைப் படுத்தியாகவேண்டும் என்பதாகத்தான் தெரிகிறது.

உருப்படியான செயல் திட்டங்கள், சோஷலிசத் தத்துவத்தை நிறைவேற்றுவனவாக இருக்கவேண்டும் என்பதும் அவரது உள்ளக்கிடக்கை என்று தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலேயே பாங்குகளை, நாட்டுடைமை அல்லது கடுமையான சமூகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவேண்டும் என்று பிரதமர் நம்புகிறார்.

இது நிதித்துறைத் தொடர்பான விஷயமாகையால், தம் விருப்பத்தைச் செயல்படுத்த, இந்தத்துறை தம்மிடமே இருக்கவேண்டும் என்று பிரதமர் நினைத்திருக்கக்கூடும். ஆனால் அதற்காக அந்தத் துறையிலுள்ள ஒருவரை விலக்கிவிட்டு, அதனை ஏற்க வேண்டும் என்று நினைத்ததனைச் சரியான நடைமுறை என்று ஒப்புக்கொள்ள முடியவில்லை.

இந்த நடவடிக்கையை, "தன் கன்னத்தில் அறைந்தது போல" என்று உவமானம் காட்டி விளக்கியிருக்கிறார் தேசாய். அவ்வளவு கடுமையாக இதனை உணர்ந்ததனாலேயே, அவர் துணைப்பிரதமர் பதவியையும் விட்டு விலகி இருக்கிறார்.

திரு. தேசாய் விலக்கப்பட்டால், அவரது அடுத்த பதவியையும் அவர் விட்டுவிடக்கூடும் என்று பிரதமர் எதிர்பார்க்காமல் இருக்க முடியாது.

இவ்வளவு நடவடிக்கைகளுக்குப் பிறகு, திரு. சஞ்சீவ ரெட்டியின் நியமனத்தையும் பிரதமர் ஏற்றிருக்கிறார். அத்துடன் தேர்வின்போது அவரது பெயரை பிரதமரே பிரேரிப்பார் என்றும் தகவல் வந்திருக்கிறது. இந்தத் தகவலை பெங்களூரிலோ, அல்லது தலைநகர் திரும்பியவுடனேயோ தெரிவித்திருந்தால் பிரச்னை இவ்வளவு தூரம் வெடித்திருக்காது.

பிள்ளையைக் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டி விடுவதுபோன்ற குழந்தைத்தனமாகத்தான் இவையெல்லாம் தோன்றுகின்றன.

திரு. தேசாய் அமைச்சரவையிலிருந்து விலகுவதன் மூலம், துணைக்கண்டத்தின் பொருளாதாரக் கொள்கை பெரிதும் மாறுபடக்கூடும் என்று வணிகத் துறையினர் கருத்தறிவித்திருக்கிறார்கள். பங்கு பேரங்கள்கூட மும்முரமடைந்திருப்பதாகவும், பம்பாயிலும், கல்கத்தாவிலும் பங்கு வணிகமே நடைபெறவில்லையென்றும்கூட செய்திகள் வந்திருக்கின்றன.

இவ்வளவுதூரம் பரபரப்பை ஏற்படுத்திவிட்டு, குடியரசுத் தலைவரின் தேர்தல் நடைபெற வேண்டும் என்பதை, மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள் யாரும் விரும்பமாட்டார்கள். அதோடு, காங்கிரசுக் கட்சி ஏச்சுக்கும் பேச்சுக்கும் இலக்காகவும், அதன் வேட்பாளரின் தேர்தல் வெற்றிகூட கணிசமான அளவுக்குப் பாதிக்கப்படக்கூடும்.

இவையெல்லாம் அவசியந்தானா? ஆரோக்கிய அரசியலுக்கு ஏற்றவைதானா? நாட்டின் எதிர்காலத்தை திட்டவட்டமான முறையில் நடத்திச் செல்லக்கூடும் என்பதற்கான சரியான நடைமுறைகளா என்பதற்குக் காங்கிரஸ் தலைமைதான் பதில் சொல்ல வேண்டும்.

★



# வினா-விடை

1. நீங்கள் தொழிலாளர்களுக்கு விரோதமாகச் செயல்படுவதாக ஒரு கம்யூனிஸ்டு இதழ், செய்தி வெளியிட்டிருக்கிறதே, தெரியுமா?

பார்த்தேன், "ஒரு நிறுவனத்தின் பொருளாதார சக்தியைக் கவனிக்காமல், தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு, பிற வசதிகள் ஆகியவைகளைத் தொழிலாளர்களிடம் உறுதி கூறி, தவறான வழி காட்டக்கூடாது" என்று மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஜெய்சுக்லால் ஹாத்தி தெரிவித்திருக்கும் கருத்தினைத்தான் 'காஞ்சி'யும் தெரிவிக்கிறது. தொழிலாளர்கள் என்றாலே 'கம்யூனிஸ்டுகளுக்கு' கோபம் பிறந்துவிடுகிறது—தங்கள் பிழைப்பில் கைவைக்கிறார்களே என்று!

2. சந்திரனுக்குச் செல்லும் விண்வெளிக் கலம் அப்பாலோ—11 பற்றி கொஞ்சம் விவரம் தருவீர்களா?

எந்த வகையான விவரம் என்று விளக்கவில்லை. அதன் அமைப்பு முறை, இயங்கும் தன்மை, செயல் முறைகள், செய்யப்போகின்றவை பற்றியெல்லாம் எல்லா நாளேடுகளிலுமே செய்திகள் வந்திருக்கின்றன. அரிதான ஒரு விவரத்தை மட்டும் தந்திருக்கிறேன்; தெரிந்து கொள்ளுங்கள். அப்பாலோ — 11, கலத்தைத் தயாரிக்க அமெரிக்க அரசுக்கு 260 கோடி செலவாகி இருக்கிறதாம்; இதில் அடங்கியுள்ள சந்திரனைச் சுற்றும் கலத்திற்கு மட்டும் 48 கோடி செலவாம். சந்திரனில் ஆம்ஸ்ட்ராங்கை இறக்கிவிடும்கலத்துக்கு 31 கோடி செலவாம். ஆம்ஸ்ட்ராங் பயணத்தின்போது அணியும் உடைக்கு மட்டும் 24 லட்சம் செலவாம். அல்லாமல் ஆம்ஸ்ட்ராங்கிற்குதான் அதிகமான சம்பளம் என்றும் இவருக்கு ஆண்டுக்கு இரண்டு லட்சம் ஊதியம் என்றும் தெரிகிறது. இதுவரையில் அமெரிக்கா சந்திரனில் மனிதனை இறக்க எடுத்துள்ள முயற்சிக்காக 18,000 கோடி செலவாகி இருக்கிறதாம்!

3. காற்றும் நீரும் தூய்மையானதாக இருக்க என்ன செய்ய வேண்டும்?

இந்தியாவிலுள்ள காங்கிரஸ்காரர்கள் அனைவரையும் சந்திர மண்டலத்துக்கு அனுப்பிவிட முடியுமா என்ன? அதுமட்டுமல்லாமல், உலகில் இரசாயனப் பொருள்களின் உபயோகமும், நச்சு மருந்துகளைப் பயன்படுத்துவதும் பெருமளவுக்கு அதிகரித்துவிட்டதனால் உலகெங்கும் நீரும் காற்றும் கெட்டுவிட்டிருக்கிறது என்று, தத்துவவாதிகள், எழுத்தாளர்கள் அடங்கிய ஆய்வுக்குழுவொன்று பாரிசில் செய்தி வெளியிட்டிருக்கிறது!

4. பொதுச்செயலாளர் தேர்தலில் நீங்கள் யாரை ஆதரிக்கிறீர்கள்?

கழகத்தின் பக்கம் தானே ஐயா எல்லாருமே இருக்க வேண்டும்!

5. 'பிராந்தியச் செய்தி' என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் என்ன?

ஆட்சி மொழிக் குழுவில் இடம் பற்றி இருந்த — கீ. இராமலிங்கனார் 'பிராந்தியம்' என்பதற்கு வட்டாரம் என்பதுதான் நேரான தமிழ் என்று குறிப்பிட்டிருக்கிறார். இதன்படி 'வட்டாரச் செய்திகள்' என்பதே நேரான தமிழ்ச் சொல் என்றாகிறது.

6. 'விவசாயக் கூலி' தொடர்பாக, கணபதியா பிள்ளைக் குழுவின் பரிந்துரைகளை, தஞ்சை மாவட்ட நிலவுடைமையாளர்கள் ஏற்றுக்கொள்ள வில்லையே?

தஞ்சைமாவட்ட நிலவுடைமையாளர்கள் என்பதைவிட, தஞ்சை மாவட்ட காங்கிரஸ்காரர்கள் என்று குறிப்பிட்டிருந்தால், அதிலேயே பதில் அடங்கி இருக்குமே!

7. 'வறட்சி நிலை' என்றால் என்ன?

இந்தக் கிழமை, செங்கை மாவட்டத்தில் பரவலாக நல்ல மழை என்று கூற முடியாவிட்டாலும் சுமாரான அளவுக்குப் பெய்திருக்கிறது. ஆயினும் பெய்த நீர், ஏரிகளில் நிற்கவில்லை. பூமி, அவற்றை 'உறிஞ்சி'விட்டது. ஏரி வறண்டுதான் கிடக்கிறது. இப்போது புரிகிறதா 'வறட்சி" என்றால்?

8. தெலுங்கானா பிரச்னை — முடிந்துவிட்டதா?

முடியக்கூடிய முடிவினையா செய்திருக்கிறார்கள் இப்போது?

9. கிராம நல ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வானொலிப் பெட்டிகளின் பயன், எப்படி இருக்க வேண்டும்?

வானொலிப் பெட்டி கிடைக்கப் பெற்ற ஒவ்வொரு ஊழியரும், முடிந்தவரையில், அந்தந்தப் பகுதியிலுள்ள விவசாயப் பெருங்குடியினரையும், விவசாயத்திலீடுபட்டிருப்பவர்களையும், விவசாயச் செய்திகள் ஒலி பரப்பப்படுகின்ற குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட ஒரு இடத்தில் கூட்டி, வானொலிச் செய்தியினைக் கேட்குமாறு செய்யலாம். எழுப்பப்படுகின்ற ஐய வினாக்களுக்கு முடிந்தால் அங்கேயே விளக்கமளிக்கலாம், அல்லது வானொலி நிலையத்தாருடன் தொடர்புகொண்டு, பின்னர் விளக்கலாம். இதல்லாமல், ஊழியர் வீட்டிலமர்ந்துகொண்டு, செய்தியினைக் கேட்டுவிட்டு, கேட்ட செய்தியினைப் பிறகு விவசாயிகளுக்கு அறிவித்தல் என்பது பயன் தராது.

10. பிரதமர் இந்திராவுக்கு, தனது வேட்பாளரை போர்டு தேர்ந்தெடுக்காதது தோல்வியல்லவா!

அரசியலில் எல்லாரும், எப்போதும் வெற்றி ஒன்றையே சந்தித்துக் கொண்டிருக்க முடியாது—சந்தர்ப்பங்களில் தோல்வியையும் எதிர்பார்க்க வேண்டியதுதான்—என்ற கருத்தை அவரே செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறாரே.

11. 'மாணவர்களுக்கு' என்று ஒரு பகுதியை 'காஞ்சி'யில் தொடங்கினால் என்ன?

நல்ல யோசனைதான். விரைவில் செயல்படுத்த முயலலாம்.

---

முகப்பில்:


திருப்பத்தூர் நகரமன்றத் தலைவர்
திரு. C.K. சின்னராசு அவர்கள்

# தம்பி

## இயற்கை கொஞ்சுகிறது! இல்லாமை கொட்டுகிறது!!

கடந்த ஒரு திங்களாகத் தமிழகத்தில், மாமழை பொழிந்தவண்ணமிருப்பதனால், இப்போது எங்கு பார்த்தாலும், இயற்கை கொஞ்சுகிறது — ஏரி குளங்களில் எழில் வழிகிறது — வயல் வரப்புகளிலே வண்ணம் காணப்படுகிறது — மரம் செடி கொடிகள் யாவும் பசுமை பொழிகின்றன, பாங்கான காட்சி தெரிகிறது. வரண்டுகிடந்த இடங்கள், வெடித்துக்கிடந்த வயல்கள், தூர்ந்துகிடந்த வாவிகள் வாய்க்கால்கள் எல்லாம் புதுக்கோலம் காட்டி நிற்கின்றன. எங்கள் மாவட்டத்தில், பாலாறுகூட 'கலகலென'ச் சிரித்துவிட்டது என்றால் பாரேன்!! பத்து பதினைந்து ஆண்டுகளாக, ஈரம் காணாது இருந்த ஏரிகளெல்லாம் இன்று நிரம்பி வழிகின்றன. 'வெறிச்சென்று' இருந்துவந்த வெளிகள் பெருமழையால் வெள்ளக் காடாயின; மழை நின்றதும், சதுப்பாகி இப்போது ஈரம் அழகளிக்கும் தோற்றம் தெரிகிறது. வரண்ட மனதினர் போன்றிருந்து வந்த குன்றுகளே இப்போது வளமளிக்கும் வகைபெற்ற நிலையில் இருக்கின்றன! அடவிகளின் நிலையைக் கூறவா வேண்டும்! நள்ளிரவில், நான் நண்பர்களுடன் கூட்டம் முடித்துக் கொண்டு வருகிறபோது, 'சலசல' வென்ற ஒலி சூழ்ந்து கேட்கிறது! கதிரவனின் பொன்னிறக்கதிர் கிளம்பியவுடன், இயற்கையின் கோலம் காண்கிறேன்; உண்மையிலேயே இயற்கை கொஞ்சுகிறது. துரைத்தனத்தாரின் அலட்சியப் போக்கின் காரணமாகச் சிற்சில இடங்களில 'உடைப்புகளும்' 'சேதங்களும்' ஏற்பட்டுவிட்டன; பட்டிகள் பலவற்றிலே மக்கள் அல்லற்பட நேரிட்டது; எனினும் மொத்தத்தில், இயற்கை எழிலுடன் காணப்படுகிறது! இந்த பேருண்மை தெரியாமலா, 'மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!' என்று மனம் கனிந்து பாடினார் இளங்கோ அடிகள்! வெண்ணிற மேகங்கள், உலவிய வண்ணம் உள்ளன — ஆடலழகிகள் நீலநிறத் திரைகொண்ட அரங்கிலே அன்னமென ஊர்ந்தும், அழகு மயிலென நடந்தும் காட்டும் பாணிமைபோல! சூல் கொண்ட மங்கை புது எழில் பெறுதல்போல, மழை முத்துக்களைக் கருவிற்கொண்டு கருநிறம் பெறுகின்றன — காணக் காட்சியாகின்றன — பிறகு, முறையும் நெறியும் மறந்தோரின் பிடியிலே சிக்கிவிட்ட நாட்டவருக்கு நாமேனும் இதம் அளித்திடல் வேண்டுமே என்ற நோக்கு கொண்டது போல, இயற்கை தன் அன்பைச் சொரிந்திடக் காண்கிறோம்.

வாரி வாரி இறைக்கிறார்கள் தம்பி, பணத்தை கோடிக் கணக்கில், கிராமப் புனருத்தாரணம் என்கிறார்கள், தேசீய விஸ்தரிப்புத் திட்டம் என்கிறார்கள், சீரமைப்பு என்று செப்புகிறார்கள், சமாஜப் பணி, மாணவர் சேவை, என்று ஏதேதோ பேசுகின்றனர் — எனினும் இயற்கை மழை பொழிந்தாலும், தம்பி பல கிராமங்கள் தீவுகளாகிவிடக் காண்கிறோம் — பாதைகள் வாய்க்கால்களாகி விடுகின்றன — கிராமங்கள் சகதிக் காடாகி விடுகின்றன! அந்த இலட்சணத்திலே இருக்கிறது, துரைத்தனம் அமைத்துள்ள பாதைத் தொடர்புகள்! பாலங்கள் ஓலமிடுகின்றன! மழை நீர் ஒழுங்காகச் செல்வதற்கான வழிக்கால்கள் சரியாக அமைக்காததால், ஆங்காங்கு குப்பைக்கூள மேடுகள் கிளம்புகின்றன! இத்தனை கேடுபாடுகளையும் நாம் மறந்திடச் செய்யும் விதத்தில், இயற்கை கொஞ்சுகிறது —



இன்ப வாழ்வுக்கான வழி அளித்திருக்கிறேன் — வளம் கொழித்திட வகை தந்துவிட்டேன்—மகிழ்ச்சிப் பெருக்கெடுத்திட வேண்டும் என்பதற்காக மாமழை பெய்வித்துள்ளேன், மாந்தரே! காண்மின்! என்மீது குறை ஏதுமில்லை அறிமின்! வாழ்வில் இன்பம் பெறுவதற்குத் தடையாக நான் இல்லை என்பதை உணருமின்! உமக்கு உள்ள கொற்றம், குடிமக்களின் நல்வாழ்வு காணும் குறிக்கோள் கொண்டதாக அமைந்தால், உமக்கு வாழ்வில் இடர் ஏதும் வருவதற்கில்லை. என் கடமையைக் கனிவுடன் செய்துள்ளேன், காண்மின்! அதோ அருவி! இதோ ஏரி, குளம், மடுவு, வாய்க்கால்! எங்கும்பசுமை! வளம் பெறுவதற்கான வாய்ப்புகள்!!—என்று இயற்கை பெருமிதத்துடன் பேசுகிறது!!

ஆமாம், தம்பி, இயற்கை கொஞ்சுகிறது, எனினும் இல்லாமை கொட்டுகிறது! என் பயணங்களில் நான் இரண்டையும் காண்கிறேன்! எல்லோரும் இன்புற்று வாழ்வதற்குத் தேவையான அளவு செல்வம் செழித்திடத்தக்க சூழ்நிலையை இயற்கை அளிப்பதும் தெரிகிறது. மிகப் பெரும்பாலான மக்கள், இல்லாமையால் இடர்படுவதும் தெரிகிறது! இயற்கையின் மீது குற்றம் காண்பதற்கில்லை. நிலநடுக்கமேற்பட்டு நாசம் விளைதல், நெருப்பைக் கக்கி நாசம் ஏவுதல் போன்றதேதுமில்லை! வெள்ளச்சேதம் சிற்சில இடங்களில் காண்கிறோம். அரசுக்கு ஆற்றல் இருந்தால் தடுத்து, சேதம் ஏற்படாது செய்திருக்க முடியும் என்பது தெரியத்தான் செய்கிறது.

இயற்கை கொஞ்சுகிறது! இல்லாமை கொட்டுகிறது! காரணம் என்ன?

வயலிலே பசுமை தெரிகிறது; உழைப்பாளியின் உடலிலே பசை காணோம்! இயற்கையின் அழகொளி எங்கும் தெரிகிறது, ஏழையின் கண்களோ இருண்டுதான் உள்ளன, ஒளி இல்லை!!

இயற்கை வளமளிப்பதாக இருந்தும், இல்லாமை இந்நாட்டு மக்களிலே மிகப்பெரும்பாலோரைக் கொட்டுகின்ற இந்த நிலைக்குக் காரணம் யாது, இந்த நிலையினை மாற்றிட வழி என்ன, இந்த வழியினைக் கண்டறிந்து கடமையினைச் செய்து வெற்றிகாணும் பொறுப்பை ஏன் துரைத்தனம் ஏற்றுக்கொள்ளவில்லை, அங்ஙனம் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாத துரைத்தனத்தை, மக்கள் எங்ஙனம் அனுமதித்துள்ளனர், ஏன் சுமந்து கிடக்கின்றனர், என்ற இன்ன பிற எண்ணங்கள் எழுந்தவண்ணம் இருக்கும், பயணத்தின்போதெல்லாம்.

பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்திற்கு, சுற்றுப்புறங்களிலிருந்து, பத்து, இருபதுகல் தொலைவிலிருந்தெல்லாம், இளைஞர்கள், இருவர் மூவர் உந்து வண்டிகளில் வந்து குழுமிடக் கண்டு களித்ததுண்டு; இப்போது இலட்சிய ஆர்வம்கொண்ட இளைஞர்கள் மட்டுமல்ல தம்பி, உழைத்து உழைத்து உருக்குலைந்துபோயிருக்கும் விவசாயப் பெருங்குடி மக்கள், தாய்மார்கள் வருகிறார்கள்! கண்டதும் எனக்குக் கவலை குடைகிறது! ஆமாம், கவலைதான்! அவர்கள், உழைப்பின் பெருமையை உற்சாகத்துடன் பேசி வரும் தலைவர்களின் துரைத்தனத்தினால், என்ன கதிக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது, கவலை குடையாமலிருக்க முடியுமா! கவனித்தாயா தம்பி, இயற்கை கொஞ்சுகிறது. உழைப்பு நிரம்ப இருக்கிறது, இருந்தும், இல்லாமை கொட்டுகிறது!

மானும் மயிலும் மட்டுமல்ல, பாம்பும் புலியும் பிறவும் பெறுகின்ற வாழ்க்கை வாய்ப்புகள்கூட இந்த கள்ளமில்லாத உள்ளம் படைத்த மக்களுக்கு, துரைத்தனம் அளித்திட மறுக்கிறது. அந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவே மறுக்கிறது.

பட்டினியும் பசியும், வேலையில்லாக் கொடுமையும் இருந்திடல் அறமல்ல, அந்த அவல நிலையைக்கண்டும் மாற்றிட முனையாத துரைத்தனம், நாகரிகமுள்ளதென்று எவரும் கூறார். இங்கோ இயற்கை அன்பு சொரிகிறது, மக்கள் வியர்வையைக் கொட்டுகிறார்கள். எல்லாம் பதவியில் உள்ளோருக்கும் அவருக்குப் பராக்குக்கூறி வாழ்ந்திடும் செல்வர்களுக்கும் குளித்திடப் பன்னீர் ஆகிறது. உழைத்தும் வாழ்வில் சுகம்காணா மக்கள், கண்ணீர் பொழிகின்றனர்; கண்ணீர்த்துளி கட்சி என்று நம்மைக் கேலி செய்வதாக எண்ணிக்கொண்டு சிலர் செப்புகின்றனரல்லவா, இந்த மக்கள், கண்ணீர்த்துளி கட்சி என்றால், அது நம் கட்சி, இனம் இனத்தோடு என்றபடி கண்ணீர் கண்ணீருடன் கலந்து உறவாடலே முறை என்று எண்ணிக்கொண்டனர் போலும், பல்லாயிரக் கணக்கிலே கூடுகின்றனர்.

ஏத்தாபூர் என்றோர் சிற்றூரில் நான் பேசிக்கொண்டிருந்தேன் — நண்பர் என். வி. நடராசன், சென்ற கிழமை முழுவதும், என்னைக் 'கிட்டி' போட்டு வேலை வாங்குவது என்பார்களே, அது போல வேலை வாங்கினார்; செல்லுமிடமெல்லாம், தேர்தல் நிதி திரட்டு, நன்கொடை கேள், மேலும் மேலும் கேட்டு வாங்கு, பொதுச் செயலாளர் ஐந்து இலட்சம் கேட்கிறார், நிதிதிரட்டு, உடனே, இங்கேயே பணம் திரட்டிக்கொடு என்று 'சிமிட்டா' கொடுத்தபடி இருந்தார்; நான்கூட, குடந்தைக் கூட்டத்தில் சொல்லியும்விட்டேன். N. V. நடராசன் என்பதற்குப் பொருள் என்ன தெரியுமா நண்பர்களே! நன்கொடை வாங்கும் நடராசன் என்பது பொருள்—என்று!

ஏத்தாபூர் கூட்டத்தில் நான் பேசிக்கொண்டிருந்த போது, கிராமத்து உழைப்பாளி ஒருவர்—முப்பது வயது இருக்கலாம்—அவர் மேனி உழைப்பால் கருத்து இருந்ததுபோலவே அவர் கட்டியிருந்த ஆடை காலத்தால் கருப்பாகிக் கிடந்தது,—மேடைக்கு வந்தார்—தேர்தல் நிதி என்றுகூறி, தொகையின் அளவு கூறாமல் பணம் கொடுத்தார்—தம்பி, ஒரு அணா!! ஆமாம் அவ்வளவுதான் இருந்தது அந்த உத்தமனிடம். அதையேனும் கொடுத்தாக வேண்டும் என்ற கடமை உணர்ச்சி இருந்தது அந்தக் கண்ணியவானுக்கு. கனவான்களுக்கு உதிக்க முடியாத கடமை உணர்ச்சி அல்லவா அது! அந்த ஒரு அணாவை, நான் ஒரு இலட்சமாக மதித்து மகிழ்ந்தேன். உபசாரப்பேச்சு அல்ல! அந்த ஒரு அணாவை என்னிடம் கொடுக்கும்போது, நான் அந்த உழைப்பாளியின் முகத்தை நன்றாகக் கவனித்தேன்—இதயம் ஒரு அணாவாக வடிவெடுத்து வந்ததை உணர்ந்தேன். அன்று இரவு பசி நீக்கிக்கொள்ளப் பயன்பட்டிருக்கும், களைப்புபோக்க தேனீர் அருந்தப் பயன்பட்டிருக்கும், ஆனால் அந்தக் கண்ணியமிக்கவன், நாடு மீளவும் கேடு மாளவும் நான் என்னாலான காணிக்கையை இதோ செலுத்துகிறேன் என்ற எண்ணத்துடன் தருகிறான் ஒரு அணா!

இத்தகைய நல்ல மனம் படைத்தோரெல்லாம், இயற்கை கொஞ்சுகிறது, உழைப்பு நி[illegible]ப [illegible]ப்படுகிறது என்ற நிலை இருந்தும், இல்லாமையால் கொட்டப்படுகிறார்கள்.

இவர்களை ஆளும் காங்கிரஸ் கட்சியினரோ, ஏழைகளை ஈடேற்ற, அவர்களுக்குத் தொழில் தந்து

துயர் துடைக்க, ஏற்கனவே இரண்டாயிரம் கோடி ரூபாய் செலவிட்டு விட்டார்கள். இன்னும் ஒரு ஆறு ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்போகிறார்கள்!!

உழைத்து உருமாறிக் கிடக்கும் உத்தமர்களே! உங்களுக்கு உள்ள தரித்திரத்தைப் போக்க, துரைத் தனத்தார் இரண்டாயிரம் கோடி ரூபாய் செலவிட்டுள்ளனர், அறிவீரா? என்று நான் பொதுக்கூட்டங்களில் எடுத்துச் சொல்லிவிட்டு, இவர்களின் முகத்தைப் பார்க்கிறேன்—திகைத்துப் போகிறார்கள் இந்த மக்கள். இரண்டாயிரம் கோடியா! எமக்காகவா! ஏற்கனவே செலவிட்டாகிவிட்டதா? நிஜமாகவா? ஏனய்யா இப்படிக் கேலி செய்கிறீர்! வெந்த புண்ணிலே வெந்தழலைப் போடுகிறீர்! பகல் பட்டினி இராப்பட்டினி என்ற நிலையில் இங்கு நாங்கள் அவதிப்படுகிறோம், எங்களிடம் வந்து இரண்டாயிரம் கோடி ரூபாய் எமக்காகச் செலவிட்டாகிவிட்டதென்று சொல்கிறீர்களே என்று கேட்பது போலிருக்கிறது அவர்கள் பார்வை.

இந்த இலட்சணத்தில் துரைத்தனத்தை நடத்தும் கட்சியினர் கல்கத்தாவில் கமிட்டி நடத்தி, மக்களுக்குப் புத்திமதி கூறுகின்றனர்! என்ன அறிவுரை அளித்துள்ளனர் அறிவாயோ, தம்பி, கேள்! கேட்டால், கைகொட்டிச் சிரிக்கத் தோன்றும்.

சிக்கனமாக வாழவேண்டும்
செலவைக் குறைத்துக்கொள்ளவேண்டும்

இதுதான், கல்கத்தாவில் சமதர்மச் சீமான்கள் கூடிக் கலந்து பேசித் தயாரித்த புத்திமதி.

வயிறாரச் சோறின்றி, மானமார ஆடையின்றி, குடியிருக்கக் குச்சியின்றி, நோய் தீர மருந்தின்றி இருக்கிறார்களே இவர்களைப் பார்த்துத்தான் காங்கிரஸ் தலைவர்கள் சிக்கனம் என்ற அறிவுரை கூறுகிறார்கள். மிக மிக நெஞ்சழுத்தம் இருக்கவேண்டும் இதற்கு! இருக்கிறது, இத்தகைய நெஞ்சழுத்தம், சீமான்களுக்கு.

“எப்போதும், உனக்கு இந்தப் பஞ்சப்பாட்டுதான்! சாமி! சாமி! பணம்! பணம்! பணம்! செச்சேச்சே! இப்படியாடா, உயிரை வாங்குவது. கையைப்பிடிப்பது, காலைப்பிடிப்பது, பணத்தை எப்படியாவது, கெஞ்சிக் கூத்தாடிப் பெற்றுக்கொள்வது; பிறகு கண்ணை மூடிக்கொண்டு, வீண் செலவு செய்வது இதே உனக்கு வழக்கமாகிவிட்டது.” என்று எலும்பு உடையப்பாடுபடும் ஏழை உழவனுக்கு இதோபதேசம் செய்துகொண்டே, வெற்றிலைச் சாறைக் காறித்துப்புகிறாரே, வடபாதி மங்கலத்தார், குன்னியூரார், கோட்டையூரார், கொடிக்காலுடையார். அந்தச் சாற்றிலே, குங்குமப் பூவும் கிராம்பும், ஏலக்காயும், சாதிக்காய், ஜாதிபத்திரியும், இருக்கிறது, தம்பி! புளித்துப்போன கஞ்சிக்கு, உறைப்பு குறைந்துபோன மிளகாய்த் துண்டைத் தேடித் தவிக்கும் உழைப்பாளிக்கு, வீண்செலவு செய்யாதே என்று புத்தி கூறுகிறார்கள். கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் கமிட்டியில், இதே உபதேசம் தரப்பட்டது.

தினமணிக்கே பொறுக்கவில்லை. எவ்வளவு எரிச்சல் ஏற்பட்டிருந்தால், ஆளவந்தார்களின் இருமல் உறுமலைக்கூட இன்னிசை என்று கூறி, கூடச் சேர்ந்து தாளம் தட்டும் தினமணிக்கே கோபம் ஏற்பட்டு, வீண் செலவு செய்யாதீர் என்று ஊராருக்கு உபதேசம் செய்வது இருக்கட்டுமய்யா ஊராள்வோரே! முதலில் உங்கள் ஊதாரித்தனத்தைச் சற்றுக்குறைத்துக்கொள்ளுங்கள் என்று கூறும், என்பதை எண்ணிப்பார், தம்பி.

“பொதுமக்களுக்கு உபதேசம் செய்யும் அனாவசியச் செலவுத் தவிர்ப்பையும் சிக்கனத்தையும், மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் முதலில் தாமே பின்பற்றி பிறருக்கு வழிகாட்டிகளாக இருக்க வேண்டும்”

தினமணியின் திருவாசகத்தில் ஒரு துளி இது!

என்ன பொருள் கிடைக்கிறது இதிலிருந்து? ஊதாரித்தனமாகச் செலவிடுகிறது சர்க்கார் என்ற உண்மை. எப்படிப்பட்ட சர்க்கார் இப்படிப்பட்ட ஊதாரித்தனமாக நடந்துகொள்கிறது? எம்மை மிஞ்சக் கூடியவர்கள் யாரும் இல்லை. எமக்கு நிகர் யாமே!—என்று தம்பட்டமடிக்கும் கட்சியினர். உலகத்திலேயே உத்தமர் என்று பெயரெடுத்த காந்தியாரால், மாணிக்கங்களாக்கப்பட்ட மண்ணாங்கட்டிகளெல்லாம், தம்மை இயற்கை மாமணிகள் என்று கூறிக்கொள்கின்றன! அவர்தம் ஆட்சியிலே நடைபெறும் ஊதாரித்தனம், தினமணிக்கே பிடிக்கவில்லை; குமட்டலெடுக்கிறது!!

தினமணிக்கு ஏதோ கோபம், அதனால்தான் ‘எதிர்க்கட்சி’ பேசுகிறது, என்று எவரும் எண்ணிவிடக் கூடாது என்பதற்காக, மேலும் விளக்கம் அளிக்கிறது, அந்த ஏடு.

“சர்க்கார்களின் முயற்சிகளில் வீண் செலவு அம்சம் ஒரு அளவு இருக்கிறது என்பது உலகமறிந்த விஷயம். தணிக்கைக் கமிட்டிகள் இவற்றை ஒருவாறு புலப்படுத்தியுள்ளன. இவற்றிற்குமேலாக தண்டச் செலவுகளும் இருக்கக்கூடும். ஏராளமான அதிகாரிகளும் கமிட்டிகளும், கோஷ்டிகளும், ஜமாக்களும், ஆலோசனைகளும், அதிகாரிகளின் மகாநாடுகளும், நடந்துகொண்டே இருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை அடிபட்டுப் போகவேண்டும். இதில் ஏற்படும் வீண் செலவும் வேலை நஷ்டமும் கொஞ்சநஞ்சமல்ல”

தம்பி! இயற்கை கொஞ்சுகிறது! இல்லாமை கொட்டுகிறது! இந்த நிலைமைக்குக் காரணமாக உள்ளவர்கள், ‘ஜமாக்கள்’ அமைத்துக்கொண்டு தண்டச் செலவு செய்துகொண்டு இருக்கிறார்கள். இது உலகறிந்த விஷயம் என்று தினமணி கூறுகிறது.

ஒவ்வொரு முறை தணிக்கைக் கமிட்டி தன் கருத்துரையை வழங்கும்போதும் நடைபெற்ற ஊழல்களை இடித்துக்காட்டுகிறது! எனினும், தண்டச் செலவும், தர்பார் போக்கும் துளியும் குறைவது கிடையாது. எதற்கு எடுத்தாலும் ஒரு கமிட்டி! எந்த விஷயத்தைப் பற்றிப் பரிசீலிக்கவும் ஒரு ‘ஜமா’—ஒவ்வொன்றுக்கும் படிச் செலவு! ஒன்றை ஒன்று மிஞ்சும் விதத்தில் செலவு! ஒரு கமிட்டியின் கருத்துக்கு நேர்மாறாக மற்றோர் கமிட்டியின் கருத்து! இந்தவிதமான ஆட்சியைச் செய்துகொண்டு, பணத்தைப் பாழாக்கி வருகிறவர்கள்தான், பாட்டாளிகளுக்கு சிக்கனமாக வாழ்க்கை நடத்துங்கள்! வீண் செலவு செய்யாதீர்கள்! என்று உபதேசம் செய்கிறார்கள். இந்த அபாரமான கண்டுபிடிப்புக்காகக் கல்கத்தாவில் கூடினர்! நாடெங்கும் கொட்டமடித்துக்கிடக்கும் எந்தக் காட்டரசனுக்கும் தெரியுமே இந்த உபதேசம்.

பொதுப்படையாகப் பேசுவது போதாது—சுட்டிக் காட்டியாவது இவர்களைத் திருத்தவேண்டும் என்று கூடத் தினமணிக்குத் தோன்றி இருக்கிறது. எனவே, துரைத்தனம், எப்படியெப்படி தண்டச்செலவு செய்கிறது என்பதைப் படம் பிடித்துக்காட்டவே முற்பட்டிருக்கிறது,

"ஒரு சிறிய பள்ளிக்கூடத்துக்கு கால்கோல் விழா, சிறிய ஓடைப்பாலத் திறப்புவிழா போன்ற சாதாரண ஸ்தல பணிகளுக்கு மந்திரிகள் அழைக்கப்படுவதும், அநேகமாக எல்லா ஜில்லா அதிகாரிகளும வரவேண்டியிருப்பதும், சகஜமாகிவிட்டது. இதனால் ஏற்படும் செலவுகள் முற்றிலும் அநாவசியமானவை"

இவ்வளவு பச்சையாக எடுத்துக் காட்டியாவது, திருத்தலாம் என்று தினமணி கருதுகிறது.

அமைச்சர்களுக்கூடச் சிறிதளவு கோபம் உண்டாகும். திண்ணைப் பள்ளிக்கூடத் திறப்பு விழாவும், ஓடைப்பால அமைப்பு விழாவுக்கும் நாம் சென்று வீண் செலவிடுகிறோம் என்று தினமணியே கேலிசெய்கிறதே என்று வருத்தமாக இருக்கும். ஆனால் இதுபோன்ற ஒவ்வோர் விழாவையும், மக்கள் காண நேரிடும்போது எத்துணை வேதனை அடைகிறார்கள் என்பதை இந்த அமைச்சர்கள் உணர்ந்தால்தானே! எத்தனை எத்தனை வீண் விழாக்கள்! தண்டச் செலவுகள்! எத்தனை கால்கோள் விழாக்கள்! கட்டடம் என்றென்றும் எழும்பப் போவதில்லை என்பது, ஊராருக்கும் தெரியும், இவர்களும் அறிவார்கள், எனினும் அதற்கும் ஓர் விழா! மக்களைக் காணவும், மக்கள் முன்பு தமக்குக் கிடைத்துள்ள புதிய மதிப்பைக் காட்டிக்கொள்ளவும், மாவட்ட கலெக்டர் முதற்கொண்டு, தமது ஏவலர்களாகக் கைகட்டி வாய்பொத்தி நிற்பதைக்காட்டவுமன்றோ இந்த விழாக்கள் நடக்கின்றன. வீண் விழாக்கள்! தண்டச் செலவு! என்று கண்டிக்கும் இதே தினமணிகள், இந்த விழாக்களின் கோலத்தை விளக்கத் தனி நிருபர்களை அனுப்புவதும், படம்போட்டுப் பாராட்டுவதும் கொஞ்சமா! இப்போது, நாற்றம் தாளமுடியாததாகிவிட்டதால், இந்தத் தண்டச் செலவுகள் ஏன் என்று கேட்டுத் தீரவேண்டி வந்தது இந்த ஏட்டுக்குக்கூட!

"பிறர் நாலணுவில் செய்யக்கூடியதை சர்க்கார் செய்தால் எட்டணு ஆகிறது என்ற பழிச் சொல்லுக்கு இடங் கொடுக்கலாகாது. தாம் தரும் வரிப்பணம் அதிகபட்ச சிக்கனமாகவும். திறம்படவும் பயன்படுகிறது என்ற நம்பிக்கை பொதுமக்களுக்கு ஏற்பட வேண்டும்"

என்று 'இரத்தினச் சுருக்கமாக' இன்றைய ஆட்சி முறையின் யோக்யதையைத் தினமணி அம்பலப் படுத்துகிறது.

இன்றுள்ள ஆட்சிமட்டும் காங்கிரஸ் கட்சியுடையதாக இல்லாமலிருந்தால், தினமணியின் எழுத்திலே தீப்பொறி காண்போமே!

ஜஸ்டிஸ் கட்சிக் காலமாக இருந்தால், என்னென்ன எழுதத் தோன்றும், இந்தத் தேசிய ஏடுகளுக்கு!

ஏழை அழுகிறான்; அவனைக் கொள்ளை அடித்துக் கொட்டமடிக்கிறார்கள்.

கமிட்டி கமிட்டி என்று அமைத்துக்கொண்டு, ஏழையின் பணத்தைப் பகற்கொள்ளை அடிக்கிறார்கள்.

திறப்பு விழாவாம்! மூடு விழாவாம்! இதற்கு பணம், கொள்ளை போகிறது!

இந்தத் 'தூங்குமூஞ்சிகளை' யார் காண விரும்புகிறார்கள்! எதற்காக இதுகள் விழா நடத்த வரவேண்டுய்!

நாலஞ்சு செலவுக்கு நூறு ரூபாய் எடுத்துக்கொண்டு, கொழுத்துவிட்டார்கள்!

என்று காரசாரமாக, நடையை நாராசமாக்கி எழுதுவர்! இப்போது தமது சொந்தக் கட்சியே இத்தகைய கேவலமான நடத்தையில் ஈடுபடுவதால், தினமணியால், இப்படியும் அப்படியுமாகத்தான் இடித்துக் காட்ட முடிகிறது. ஆனால், உண்மையை ஊரார் அறிந்துகொள்வதற்கு இவ்வளவே போதும். இயற்கை கொஞ்சுகிறது. இல்லாமை கொட்டுகிறது. அதற்கான காரணத்தில் ஒன்று ஊராளும் பொறுப்பும் வாய்ப்பும் ஒரு ஊதாரிக் கூட்டத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பது. இதனை உணர்ந்துகொள்ள, தினமணியின் கண்டனம் போதுமானதுதான்.

இம் முறையில் ஊதாரித்தனமாக நடந்துகொள்ள எப்படி முடிகிறது? கேட்பதற்கு நாதி இல்லை! தினமணி எழுதுவதுகூட குதிரை பறிபோனபிறகு கொட்டிலைப் பூட்டும் கதை போன்றதுதான். கமிட்டிகள், ஜமாக்கள், விழாக்கள், வீண் செலவுகள், இவை கிளம்புப்போதே, ஆட்சி மன்றத்திலே, கேள்விக் கணைகளைப் பூட்டி, தடுத்து நிறுத்த, எதிர்க்கட்சி எங்கே இருக்கிறது? கடிவாளம் இல்லை. குதிரை, காடுமேடு தாவிச் செல்கிறது!! எதிர்க்கட்சி இல்லை, எனவே ஊரார் பணம் ஊதாரிச் செலவுக்குப் பாழாக்கப்படுகிறது!!

இரண்டாயிரம் கோடி என்ன—இருபதினாயிரம் கோடி செலவானாலும், இப்படிப்பட்ட துரைத்தனம் நடத்துவோரின் தர்பாரில் நாடு சிக்கிக் கிடக்கிறவரையில், இல்லாமை கொட்டத்தான் செய்யும்—இதனைத் தம்பி! அரசியல் விளக்கஏடுகள் படித்தவர்கள் அறிந்துகொண்டிருப்பதைவிட, நான் காட்டினேனே, ஒரு அணு கொடுத்த உழைப்பாளி, அப்படிப்பட்டவர்கள் மிக நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

இதுதானா இரகசியம்? நீங்கள். இல்லாமைக்குக் காரணமாக இருப்பவர்கள் இந்த ஊதாரித்தனமிக்க ஆட்சியாளர்கள் என்பதை எடுத்துரைக்கிறீர்களா—? இதைக் கேட்கத்தான். திரள் திரளாக மக்கள் கூடுகின்றனரா? அப்படியானால், நாங்களும் அதனையேதானே செப்புகிறோம்! உம்மைவிடச் சற்று அதிகமான வீரதீரத்துடன், காரசாரமாகவே சொல்கிறோமே...என்று கேட்கும், மற்ற மற்ற கட்சிகளைக் காண்கிறேன்.

தம்பி! இயற்கை வளமளித்தும், உழைப்பு உற்பத்தி அளித்தும்கூட, இல்லாமை கொட்டுவதற்குக் காரணம், ஆட்சியாளர்களின் ஊதாரித்தனம் மட்டுந்தான் என்று கூறவில்லை. பல காரணங்களிலே இது ஒன்று என்பதை விளக்கிவிட்டு, ஊதாரித்தனமாக நடந்து கொள்ளாதீர்கள், ஊருக்குப் பயந்து ஆட்சி நடத்துங்கள், ஏழையின் வயிறு எரியச் செய்யாதீர்கள், என்று அறிவுரை கூறித் திருத்த முற்பட்டாலும், ஆட்சிக் குழுவினரையேகூட மாற்றி அமைத்தாலும், பலன் கிடைக்காது; ஏனெனில், நந்தம் நாட்டைப் பொறுத்த மட்டில், ஆட்சியிலே வீற்றிருப்போருக்கு, அளிக்கப் பட்டுள்ள அதிகாரம் மிக மிகக் குறைவு; ஆட்டிப் படைத்திட டில்லியிலே ஓர் பேரரசு இருக்கிறது, இங்கு உள்ளது, பேருக்குத்தான் அரசு என்ற உண்மையை எடுத்துக் காட்டுகிறோம்.

இதுபோது காணக் கிடைக்கும் இயற்கை அழகு ஒருபுறம் இருக்கட்டும், தம்பி, திராவிடம் முழுவதும் கூட அல்ல, தமிழகம் வரையிலேயே வேண்டுமானால், பார்க்கச் சொல்லு, பரந்த மனப்பான்மையினரை என்ன வளம் இங்கு இல்லை? என்ன பொருள் கிடைக்கவில்லை?

தமிழ்நாடு எல்லை, சிதைக்கப்பட்டு, உரிய இடங்கள் பறிக்கப்பட்டுப் போன நிலையிலும், தனி அரசு செலுத்தி மதிப்புடன் வாழ்ந்து வரும் பல சுதந்திர நாடுகளைவிட, அளவிலும் வளத்திலும் பெரிதாகவே இருக்கிறது.

50170 சதுர மைல் அளவுள்ளது இன்றைய தமிழகம்!

தமிழகத்து மக்கள் தொகை மூன்று கோடி—இதில் 2,65,46,764 மக்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்,

விளை நிலம் மட்டும் 12878000 ஏக்கர் உள்ளன என்று புள்ளி விவரத் தயாரிப்பாளர்கள் கூறுகின்றனர்.

விளை நிலம் ஆகத்தக்கதும், இன்று ஆட்சியாளரின் அசட்டையால் கரம்பாகிக் கிடப்பதும் மட்டும் 37 இலட்சம் ஏகருக்கு மேலிருக்கிறதாம்.

காட்டு வளத்துக்கும் குறைவு இல்லை.

விஞ்ஞானத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான கனிப் பொருள்கள் ஏராளமாக உள்ளன—பூமிக் கடியிலே தூங்கிக் கிடக்கின்றன!

இன்று புதிய முறை தொழில்களுக்காக

குரோமைட்
மோனசைட்
சில்மனைட்
கார்னெட்

என்றெல்லாம் கூறுகிறார்களே. அப்பொருள்களும், உலகத்தின் போக்கையே மாற்றி அமைக்கத் தக்கதான

தோரியம்
யுரேனியம்

ஆகியவைகளும் தமிழகத்தில் ஏராளமான அளவுக்குக் கிடைக்கின்றன.

பொன்னும் மணியும் ஒரு நாட்டுக்கு வாழ்வும் வளமும் அளித்திடாது; ஆனால் எந்த நாடும் பொன்னுடு ஆகத்தக்க நிலையை ஏற்படுத்த இரும்பும் நிலக்கரியும் இருக்கவேண்டும். இந்த இரு செல்வங்களையும் தமிழகம் தன்னகத்தே கொண்டிருக்கிறது. நெய்வேலி பழுப்பு நிலக்கரியின் பாங்கினைப் பாராட்டாத நிபுணர் இல்லை; மிக உயர்தரமானது என்கின்றனர்; கிடைக்கும் அளவும் மிகப் பிரம்மாண்டமானது; பல நூற்றாண்டுகள் கிடைக்குமாம்!

கஞ்சமலை, கோதுமலை, கொல்லிமலை, கொத்தளமலை, பச்சைமலை, பெருமாமலை, தீர்த்தமலை, சித்தேரிமலை, ஆகிய இடங்களில், இரும்பு சிறைப்பட்டிருக்கிறது, விழிப்புற்று எழுச்சிபெற்ற தமிழகம் அமையுமானால் தூங்கிக் கிடக்கும் இந்தக் கருப்புத் தங்கத்தை வெட்டிக் கொணர்ந்து, தமிழகத்தைத் தொழிலகமாக்கி செழிப்பினைக் காணலாம். சேலம் மாவட்டத்திலே இரும்பு! தென் ஆற்காடு மாவட்டத்திலே நிலக்கரி! சேலத்து இரும்பு 30 கோடி டன் என்கிறார்கள். நெய்வேலி நிலக்கரி 100 சதுரமைல் அளவுக்கு அடைந்து கிடக்கிறதாம், 200 கோடி டன் அளவு நிலக்கரி உள்ளது என்கின்றனர்.

சேலம் சேர்வராயன் மலையில் பாக்சைட், மாக்னசைட், திருச்சி அரியலூர் வட்டாரத்தில் ஜிப்சம், குமரி முனையில் தோரியம், — தம்பி! காவிரிப் பகுதியில் பெட்ரோலாம்! எந்தெந்தப் பொருள் கிடைக்காமல் நாடு பல திண்டாடுகின்றனவோ. அந்தப் பொருள் யாவும் இங்கு நமக்காக இயற்கை, கட்டிக் காத்து வருகிறாள்—கனிவுடன் அழைக்கிறாள். ஆனால், வெட்டி எடுக்க நமக்கு உரிமை ஏது!

கட்டித் தங்கமடா, மகனே! பலகாலமாக உனக்காக நான் காத்து வந்திருக்கிறேன், வெட்டி எடுத்துக் கொள் என்று வாஞ்சையுடன் தாய் அழைக்கிறாள், தனயன், "அந்தோ அன்னையே! என் கரம் கட்டுண்டு கிடக்கிறதே!" என்று கண்ணீர் பொழிந்து நிற்கிறான்.

சேலத்து இரும்பு சிறைப்பட்டிருக்கிறது—டாட்டா கம்பெனிக்கு நாம் கப்பம் கட்டுகிறோம்.

நெய்வேலி நிலக்கரி வெளி வர மறுக்கிறது. இங்கு ஏழையின் கும்பி, இல்லாமையால் எரிகிறது! காடு போதும், நாட்டுக்கு செல்வமளிக்க! எனினும் இங்கு நஞ்சை கரம்பாகிறது—கரம்பு கள்ளி காளான் படரும் இடர்மிகு இடமாகிறது. பச்சை மாமலைகளும், பளிங்கன்ன நீரோடைகளும் இங்கு இருந்தும், பசி! பசி! என்று பதறிக் கதறி, வேலை கிடைக்காததால் வேற்றுச் சீமைகள் சென்று சோற்றுக்கு அலைகிறார்கள், நேற்று வரையில் நானிலம் போற்றிடத்தக்க நல்லாட்சியில் இருந்தவர்கள்.

கத்துங் கடலில் முத்து எடுத்து கடலகமெனத் திகழும் கலம்தனில் ஏறிச்சென்று, காற்றை அடக்கி, யவனம் சென்று. வாணிபம் நடாத்தி, பொன்னும் புகழும் ஈட்டினர்—முன்னோர்.

நாமும் தமிழரே! நாமமதில் தமிழர் என்றாரே, பாரதியார், அந்தத் தமிழர்! நாம், நமது உடன்பிறந்தாரை, மலாய்க் காட்டுக்குத் துரத்திவிட்டிருக்கிறோம்! பர்மாவில் ரப்பர் பால் எடுக்கிறார்கள்—தாயகத்தின் கோலத்தை எண்ணி அழுகின்றனர்! இங்குள்ள ஏழை எளியவர்களோ இல்லாமை கொட்டும்போது, 'அக்கரை' சென்றாலாவது அரை வயிறு கஞ்சி நிச்சயமாகுமே, போகலாமா, என்று எண்ணி ஏங்கிக் கிடக்கின்றனர்.

கட்டழகி, கன்னிப் பருவத்தினள் கலகலெனச் சிரித்தபடி, மணமிகு சந்தனம் குழைத்துப் பூசி, மகிழ்தல்போல பொன்னி எனும் பேரழகி பூரிப்பை அள்ளித் தெளிக்கிறாள். காவேரி தண்ணீர் பட்டால் கன்னியர் மேனி தங்கம், தங்கம்! என்று கவி சுரக்கிறது, அவள் எழிலை எண்ணும்போதே.

செந்நெலைக் கண்டு செங்கமலம் சிரிக்கிறாள்—அன்னம் அதுகண்டு நின்ற நிலையிலன்றோ நீ இருப்பாய், என்போல் குடைந்தாடி மகிழவல்லாயோ என்று கேட்டு கவர்ச்சியூட்டக் காண்கிறோம்,

கன்னல் விளைகிறது; காரமிக்க மிளகுக் கொடிகள் படருகின்றன!

உலகின் தொழில் துறை பலவற்றுக்கும் தேவையான ரப்பர் விளையும் காடுகள்—மனைக்கும் மரக்கலத்துக்கும் தேவையான தேக்கு—ஓங்கி வளரும் தெங்கும், ஒயிலாகக் காட்சி தரும் கமுகும், என்னென்ன எழில், எத்துணை வளம், எல்லாம் நந்தம் இன்பத் தமிழகத்தில்!

முல்லை மணமும், காட்டிலே விளைந்துள்ள சந்தன மரத்திலே உடலைக் களிறு தேய்ப்பதினாலே எழும் நறுமணமும், தென்றலிற் கூடிக் கலந்து வந்து தமிழகத்துக்கு என்றோர் தனி மணமல்லவா தருவதாக உளது.

எனினும் வறுமை முடை நாற்றமன்றோ அடித்திடக் காண்கிறோம்.

சந்தன மணத்தைச் சாகடிக்கும் அளவுக்குச் சஞ்சலச் சாக்கடை நாற்றமடிக்கிறது.

இத்தனை இருந்தும் இல்லாமையை விரட்டிட ஓர்

மார்க்கமின்றி இடர்ப்பட்டுக் கிடப்பதற்குக் காரணம், உள்ளத் தெளிவற்றோர் ஊதாரிகள், மக்களாட்சியின் மாண்பினை மாய்த்திடுவோர் பிடியில் ஆட்சி சிக்கிவிட்டது என்பது மட்டுமல்ல. இவர்களின் அதிகாரம் என்பது செல்வர் சிலருக்குச் சுகபோகம் வழங்கிடவும், செல்லரித்துப்போன வாழ்வினர், பெருமூச்சினைச் சிறிது உரத்துக் காட்டினாலே பிடி! அடி! சுடு! என்று அடக்குமுறை வீசவுமான அளவுக்குத்தான் அமைந்திருக்கிறது!! தமிழகத்தைத் திருநாடு ஆக்கும் திட்டம் தீட்டிச் செயல்படும் உரிமை இவரிடம் இல்லை! மக்களின் வாழ்க்கையில் உள்ள வாட்டத்தை ஓட்டிட, இயற்கை வளத்தையும் மக்களின் உழைப்பின் திறத்தையும் ஒன்று கூட்டிட, அதன் பயனாகக் கிடைக்கும் செல்வத்தைச் சமுதாய உடைமையாக்கிட இவர்கட்கு உரிமை கிடையாது. எனவே, இயற்கை கொஞ்சியும் இல்லாமை மிஞ்சுகிறது என்றால், அதற்கான காரணங்களிலே மிக முக்கியமானது, இங்கு அமைந்துள்ளது பேருக்குத்தான் அரசு — சிலருடைய பெருமைக்குத்தான் அரசு — உண்மையில் முழு அதிகாரம் படைத்த அரசு அல்ல.

—இது பிரசாரம் — தீதான பிரசாரம் என்கின்றனர் டில்லியிடம் வரம் கேட்டு வாங்கி வாழ்க்கையை நடத்தி வருவோர்.

இது குறுகிய மனப்பான்மை. குறை நெளியும் கொள்கை, தவறுள்ள தத்துவம் என்கின்றனர். அகிலமெல்லாம் கட்டி ஆளும் ஆற்றலைப் பெற்றோம் என்ற ஆசைக்குப் பலியானவர்கள்.

அமைச்சர்கள் — அதிலும் அமைச்சர் அனைவருக்கும் 'வாய்' அளித்திடும் நிதி அமைச்சர் — டில்லியின் ஆதிக்கம் என்பது அபத்தம் என்று அறைகிறார்.

ஆனால், இவர்களில் ஒவ்வொருவரும், தத்தமது தலையில் குட்டு, எரிச்சல் ஏற்படும் அளவுக்குப் பலமாக விழும்போது, பதறிப் பதறிக் குளற முன்வருகின்றனர் — ஆமாம்! டில்லியிடம் கேட்கவேண்டும்! எம்மிடம் இல்லை! என்று பேசுகின்றனர்.

முதலமைச்சர் காமராஜரே கூடப் பேசுகிறாரே, உயிர்நீத்த உத்தமர் சங்கரலிங்கனாரின், கோரிக்கைகள் 12ல் 10 மத்திய சர்க்காரைப் பொறுத்தது என்று.

அமைச்சர்களாக ஆக்கப்பட்டுள்ள இவர்களுக்கு, டில்லியின் தயவு இருக்கும் வரையில்தான் 'பதவி பவிசு எல்லாம்; டில்லியின் முகம் சிறிதளவு சுளித்திடும் அளவில் இவர்களின் போக்கு இருப்பினும்கூடப் போதும், காஷ்மீரச் சிங்கத்தின் கதிதான்!

பாகிஸ்தானில் உள்ளவர்கள் உன் இனத்தவராக இருக்கலாம், மார்க்கத்தால், பழக்க வழக்கத்தால், நடைநொடி பாவனைகளால், அங்கு உள்ளோர் நமது இனத்தவர் என்று தோன்றக் கூடும்—ஆனால் அந்தச் சபலத்துக்கு இடமளித்தால், உமது சுதந்திரம் சுக்குநூறாகும்—என்று அன்பு சொட்டச் சொட்டப் பேசி, காஷ்மீர் சிங்கம் ஷேக்அப்துல்லாவை வலையில் போட்டுக்கொண்டு, பாரதம் முழுவதும் உலாவரச் செய்து, அவரைக்கொண்டே ஜனாப்ஜின்னாவை ஏசச் செய்து, பாகிஸ்தானை எதிர்க்கச்செய்து, இவ்வளவுக்குப் பிறகு, அவர் காஷ்மீர் இந்தியாவின் நேசநாடாக மட்டும் இருக்கும், ஆனால் அடிமை நாடு ஆகாது. தனி நாடாகத்தான் இருக்கும் என்று கூறத் துணிந்ததும், அவர் வாயை அடைத்து கைகாலைக் கட்டி, சிறையில் போட்டுப் பூட்டி, வழக்கும் போடாமல், வாட்டுகிறார்களே! சிங்கத்துக்கே இந்தக் கதி என்றால் சிறுநரிகள் கதி யாதாகும்!! இந்த அச்சம், நமது அமைச்சர்களைப் பிடித்தாட்டுகிறது.

இந்த நிலைமையைத் தம்பி, நாம் ஒவ்வோர் நாளும் கூறுகிறோம் ஒவ்வோர் துறையிலே கிளம்பிடும் பிரச்சினைகளையும் எடுத்துக் காட்டிக் கூறுகிறோம்.

நமக்கு ஏன் இந்த வம்பு என்று இருக்கும் இயல்பினர்கூட தமக்குத் தனி அக்கறையுள்ளதென்று உள்ள பிரச்சினைகளிலே, டில்லியின் இரும்புக் கரம் அழுத்தமாக விழுகிறபோது, அலறித் துடித்துக் கிளம்புகின்றனர்.

இறக்குமதி ஏற்றுமதி சம்பந்தமாக நீதி கிடைக்க வேண்டும், டில்லியிடம் நீதி கிடைக்கவில்லை, என்று மனம் உறுத்தும்போது வாணிபத் துறையினர், வாய் திறக்கின்றனர் — எல்லாம் டில்லியிடமா! ஈதென்ன முறையற்ற செயல்!!—என்று குமுறுகின்றனர்.

தொழில் துவக்குவோர், துவக்கிடும் தொழில் துவண்டிடக் காண்போர் மனம் நொந்த நிலை பெறுகிறபோது, எழுகின்றனர். எல்லா வளமும் வடக்கேதானே! தெற்கை யார் கவனிக்கிறார்கள்? என்று கேட்கின்றனர்.

அவ்வப்பொழுது அனந்தராமகிருஷ்ணன் எனும் தொழிலதிபர், பேசிடக் கேட்கிறோமல்லவா?

அமைச்சர்களேகூடச் சில வேளைகளில், பேசிவிடுகின்றனர்—பிறகு அஞ்சி ஆமையாகிவிடுகிறார்கள்.

குமாரசாமி ராஜா அவர்கள் குமுறிய உள்ளத்தோடு பேசத் தலைப்பட்டதை, நாடு எங்ஙனம் மறந்துவிடும்! எல்லாம் மத்திய சர்க்காரில் என்று இருக்கும் நிலைமையை எதிர்த்துப் போரிட வேண்டிய காலம் விரைவில் வரும் என்றல்லவா கூறினார்.

தமிழகம், அவர் இந்தத் துறையில் முனைந்து நிற்பாரானால், வாழ்த்தி வரவேற்றிருக்கும், வணங்கி அவர் தலைமையைப் பெற்றிருக்கும்.

கோவையில் கொதித்தெழுந்தவர், பிறகு ஏனோ மௌனமாகிவிட்டார். காலம் கனியவில்லை என்று கருதுகிறாரோ—என்னவோ!

எனினும் அவரவருக்கு முக்கியமானது — உயிர்ப் பிரச்சினை என்று கருதத்தக்க கட்டம் கிளம்பும்போது, அவர்களெல்லாம், டில்லியின் ஆதிக்கம் ஆகாது, கூடாது, பெருந்தீது! என்று பேசுவது காண்கிறோம்.

இவர்களெல்லாம் தொடர்ந்து இந்தக் கருத்தை நாட்டிலே எடுத்துரைத்து, மக்களைப் பக்குவப்படுத்தலாகாதா என்று ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறோம். பிறகோ அவர்கள், வாய் மூடிடக் கண்டு வாடுகிறோம்; சரி, சரி, இன்னும் இவர்களே பக்குவப்படவில்லை என்றெண்ணிக்கொண்டு, நாம் நமது பணியினைத் தொடர்ந்து செய்து வருகிறோம். ஒரு அணா கொடுத்தானே, உழைப்பாளி, அவன் இதை அறிவான்!! நம்மிடமிருந்து தொடர்ந்து இந்தப் பணியை எதிர்பார்க்கிறான், சோர்வடையாதீர்கள்! என்னால்ஆன உதவியை நான் அளிப்பேன் என்று சொல்லால் அல்ல, செயலால் காட்டுகிறார்கள். இத்தகைய செம்மல்கள், அவர்களை அமைச்சர்கள் அறிவதில்லை.

இந்தியாவிலிருந்து கலைத் தூதுக் குழுவினர் பலர் பல முறை வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கின்றனர்...மக்கள் போற்றி மகிழும் கலைஞர்கள் தமிழ்நாட்டிலிருந்து தூதுக் குழுவுக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பப்படவில்லை. ஊர் பேர் தெரியாத யாரோ ஒரு சிலர் தமிழ் நாட்டின் கலைஞராகப் போய்வருகிறார்கள். காரணம் என்ன? மக்களின் மனதை அறிந்து நடக்கும் ஆட்சி இல்லை. மத்திய அரசியலார்,

பாராளுமன்றத்தில் ஒரு சிலரை மட்டும் நம்புகிறார்கள். அவர்கள் மனம்போல் எல்லாம் நடக்கிறது. மத்திய அரசியலாரின் போக்கை மாற்றவோ திருத்தவோ இங்குள்ள அரசியலார் முன்வருவதில்லை! அச்சம் தடுக்கிறது.

தம்பி! பிரச்சினை கலைத்துறை பற்றியது—எனினும் என்ன—எந்தத் துறையில் அநீதி காணப்பட்டாலும் அதனைக் கண்டித்துக் களைந்து எறியத்தானே வேண்டும்.

மத்திய அரசியலாரின் போக்கைக் கண்டிக்கிறார்—இதனை மாற்றாது இருக்கும் இங்குள்ள நமது பேர் அரசையும் கண்டிக்கிறார்.

அச்சம் தடுக்கிறது இவர்களை என்றார்.

பயந்தாங்கொள்ளிகள்—தொடை நடுக்கம் கொண்டோர்—கோழைகள்—என்றெல்லாம் அந்த அச்சம் என்பதற்குப் பல பொருளைப் பெறலாம். அச்சம் தடுக்கிறது! என்ன அச்சம்? அதுதான் தம்பி, ஷேக் அப்துல்லா பற்றிச் சொன்னேனே, அந்த அச்சம்தான். பதவியும் பவிசும் போய்விடுமே என்ற அச்சம்—வேறென்ன? போனால் என்ன? மானமன்றோ பெரிது! நாடல்லவா பெரிது! என்று ஒரு அணு கொடுப்போன் கேட்பான்—ஆமாம்—அவனிடம் அணுக்கள் தானே உள்ளன. பதவியில் உள்ளவர்கள், மானத்தை இழந்துவிட்டாலும், இலட்சாதிபதியாகிறார்களே — அதிலே அவர்களுக்குத் திருப்தி — பெருமை—பாசம்! ஆசை ஊட்டவும் அச்ச மூட்டவும், டில்லிக்கு முடிகிறது.

டில்லிக்கு இந்த நிலை இருக்கும் வரையில், இங்கு அரசுக் கட்டிலில் அமருவோர் அடங்கி ஒடுங்கி 'அடைப்பம்' தாங்கு மட்டும் கொலுவிருக்கலாம், ஏன் என்று கேட்கத்துணிந்தால், ஷேக் அப்துல்லாவாக வேண்டும். இந்த அச்சம் தடுக்கிறது.

எனவேதான் தம்பி, ஆட்டிப் படைக்கும் டில்லியின் பிடியில் திராவிடம் சிக்கிக்கிடக்கும் நிலைமை ஒழிந்தாக வேண்டும் என்று நாம், கூறுகிறோம்.

தமிழ்நாட்டு மக்களின் பலவகைக் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. எல்லைப் பிரச்சினையைத் தமிழ் மக்கள் முன் ஒருமுறை எழுப்பியபோது, ''கேட்கத் துணிந்துவிட்டீர்களா? கேட்டால் உள்ளதும் போய்விடும்'' என்று செங்கோட்டையை எடுத்துப் பிறருக்குத்தந்தனர். மீண்டும் ஒருமுறை கேட்டபோது ''அப்படியா? இன்னும் உங்கள் துணிவுபோகவில்லையா? தமிழ்நாடு என்று நாடும் இல்லாமல் செய்துவிடுவோம். தட்சிணப் பிரதேசம் என்று உங்களில் சிலரைக் கொண்டே மாற்றியமைத்துவிடுவோம். எங்களால் முடியும், தெரியுமா'' என்ற மிரட்டலே கிடைத்தது. அமைதியான கிளர்ச்சி ஒன்று நடந்தபோது ''இவ்வளவா, தமிழ்நாடு என்ற பெயரும் கிடையாது, போ'' என்று விரட்டலே கிடைத்தது.

தெளிவாக, நிலைமை விளக்கப்பட்டிருக்கிறதே; படம் பிடித்துக் காட்டுவதுபோலிருக்கிறதே, யார் இப்படி விளக்கமாகத் தந்திருப்பவர் — என்று கேட்கத் துடிக்கிறாய் அல்லவா?


தம்பி, மிரட்டல், விரட்டல் என்று கூறியிருப்பது கேட்டு ஆட்சியாளர்கள் மனம் 'சுருக்'கெனத்தான் தைக்கும். ஆனால், நிலைமை இதுதான். அச்சத்தால் இங்குள்ள அமைச்சர்கள் காலமெலாம் வாயடைத்துத்தான் கிடக்கின்றனர்—எப்போதோ ஓர் சமயமாகிலும், பொதுமக்கள் பொங்கி எழுவது கண்ட பீதியால், எதிர்க்கட்சிகளின் ஏளனம் குத்துவதால், ஓரோர் சமயம் உள்ளமே சுடுவதால் துடித்து எழுந்து, நீதி கேட்கின்றனர் — அப்போது டில்லியிடமிருந்து அவர்கட்குக் கிடைப்பது என்ன? மிரட்டல்—விரட்டல்!

ஆமாம் டில்லியின் போக்கையும் இங்குள்ள நம் அமைச்சர்களின் நிலையையும் அழகுபட எடுத்துரைத்துள்ள இவர் யார், என்றுதானே கேட்கிறாய்.

தம்பி, இவர் நமது கழகம் அல்ல. எந்தக் கழகத்தினரும் அல்ல, அரசியல்வாதியே அல்ல,

அப்படியா? அப்படியானால்.........யார்:......என்று கேட்கிறாய், தெரிகிறது......கேட்டுப்பார், நண்பர்களை, இப்படி, டில்லி — சென்னை நிலைமைகளைப் படம் பிடித்துக் காட்டுபவர், யார் என்று; நீயேகூடத்தான் கண்டு பிடியேன் பார்க்கலாம். அடுத்த கிழமை நான் அவரை உனக்குக் காட்டுகிறேன்.

அண்ணன்,



(18—11—56 திராவிட நாடு இதழில்)

---

## நிலா முகப்பில்!

நிலாவைப் பற்றிய பல முக்கிய கேள்விகளுக்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை. எனினும் நிலா விஞ்ஞானிகள் ஏராளமான அடிப்படைத் தகவல்கள் திரட்டியுள்ளனர் சுவையான இத்தகவல்களில் சில வருமாறு:

நிலா கிட்டத்தட்ட (பந்து போல) உருண்டை வடிவமான ஒரு கோள் அதன் குறுக்களவில் ஏறத்தாழ 2,160 மைல் இது கிட்டத்தட்ட பூமியின் குறுக்களவில் கால் பங்கு நிலவில் ஈர்ப்பு விசை, பூமியிலுள்ளதில் ஆறில் ஒரு பங்கு பூமியின் பொருண்மையில், என்பதில் ஒரு பங்கு பொருண்மையுள்ளது நிலா, நிலாவின் அடர்த்தி நீரின் அடர்த்தியைப் போல 33 மடங்கு பூமியின் அடர்த்தி 55 மடங்கு.

இவை யனைத்தும் நிலா சிறியது குறைந்த எடையுள்ளது என்று நன்கு புலப்படுத்துவதோடு அதைச் சுற்றி ஏன் ஒரு காற்றுமண்டலம் இல்லை என்பதையும் விளக்குகின்றன. காற்றைப் பிடித்து வைத்துக் கொள்ளப் போதுமான ஈர்ப்பு விசை அங்கு இல்லை.

நிலா 2718 நாளில் ஒருமுறை சுழல்கிறது துல்லியமாக இதே காலத்தில் அது பூமியை ஒருமுறை சுற்றி வருகிறது;

நீள்வட்டமான பாதையில் நிலா பூமியைச் சுற்றி வரும்போது, பூமிக்கு மிக அருகில் வருகையில் தொலைவு 221,460 மைல் மிக எட்டத்தில் செல்லும்போது தொலைவு 252, 710 மைல். சராசரியாக அது பூமியிலிருந்து 239,000 மைல் தொலைவில் இருக்கிறது.

பூமியைப்போலவே நிலாவுக்கும் சுயமாக ஒளிகிடையாது. சூரியனிடமிருந்து நேராகவும் பூமியில் பட்டுப் பிரதிபலிப்பதிலிருந்துமே அது ஒளி பெறுகிறது.

நிலாவில் காற்றுமண்டலம் இல்லாததால் அங்கு கடும் தட்ப வெப்பநிலை நிலவுகிறது. நிலாவில் பகலில் வெப்பம் 250 டிகிரிஃபாரன் ஹீட்: இரவில் குளிர் மைனஸ் 280 டிகிரி ஃபாரன் ஹீட்.

மேல் பரப்பில் தண்ணீர் கிடையாது என்று நிலா வல்லுநர்கள் பொதுவாக ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் அது பனிக்கட்டி வடிவத்தில் (மேல் பரப்புக்கு) அடியில் இருக்கக்கூடுமென்று சிலர் நினைக்கின்றனர்.

நிலாவில் உயிர் வாழ்க்கை (ஆறறிவுக்குக் குறைவான உயிர்கள் வாழ்வதுகூட) அரிது. ''நமது பொருட்களைத் தூய்மைப் படுத்துவதற்கு ஏற்ற இடம் நிலா அங்கு அவற்றைப் போட்டு வைக்கலாம்'' என்று ஒரு சமயம் தலைசிறந்த நிலா விஞ்ஞானி ஒருவர் குறிப்பிட்டார். அந்த அளவுக்கு கிருமிகள் கூட இல்லாத உலகம் நிலா.

With the best compliments from:

**Guru Shree Shantivijai Jain Trust,**

MADRAS-7.

With the best compliments from:

**Pioneer Civil Works**

KANGAYAM.



# காங்கிரஸ்-காப்பாற்றப்படுமா?

அன்புள்ள நண்பா!

பேரிரைச்சல் பெரிதாகக் கேட்டுக்கொண்டிருக்கிறது. உஸ்..உஸ்..எனசூறைக்காற்றுஓசையைக் கிளப்பி ஏதோவொரு பயங்கரமான நிலையை உண்டாக்கிவிடுவேன்! ஜாக்ரதை என்று எச்சரிக்கை செய்வது போன்ற இரைச்சலை எழுப்பிக் கொண்டிருக்கிறது. வானமோ, தூரலிடத் தொடங்கிவிட்டது. இப்படி இயற்கையின் நிலையை அறியும்போது, இன்னும் கொஞ்ச நேரத்தில் புயல் அடிக்கக்கூடும்; காற்றின் வேகம், கடிதாக இருக்கக்கூடும் என்று நம்ப முடியுமல்லவா! இப்படிப்பட்ட நிலைமைகளுக்கிடையே இருந்து சமுதாயத்தைப் பற்றிச் சிந்திக்க இந்தக் கிழமை இயலாமற் போய்விட்டது. ஓட்டைக் குடிசைக்குள் இளம் மனைவியுடனும், பச்சிளம் குழந்தையுடனும் ஒண்டியிருப்பவன், புயல் சின்னத்தை உணர்ந்துகொண்ட பிறகும், பாதுகாப்பான இடத்தைத் தேடி ஓடாமலிருக்க முடியுமா? முறையா? சமுதாயத்தைப் பற்றி நாளைக்குக் கூடச் சிந்தித்துக் கொள்ளலாம். இப்போது கிடைத்திருக்கிற சூடான—சுவையான அரசியல் நிலைமை, நாளைக்கு மீண்டும் கிடைக்காது. நல்லதோர் தேநீர் விருந்து. பருகிக் களிப்போம்; முதலில் தாகந் தீர்ப்போம். அலைஓசை அடங்கியபின் சமூகம் பற்றி மீண்டும் ஆராய்வோம். அலைஓசை அடங்கிய பின்னு? நடக்குமா இது? என்று குழப்பிக் கொள்ள வேண்டாம்! இது அரசியல் அலைஓசை! எப்போதாவது—சில நாட்களேனும் ஓயும்! ஒடுங்கி இருக்கும்!

சென்ற கிழமை நண்பா, அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டம், பெங்களூரில் தடபுடலாக நடைபெற்று முடிந்திருக்கிறது.

இந்தக் கூட்டம் தொடங்குவதற்கு முன்பே, இந்தியத் துணைக் கண்டத்தை ஆள்கின்ற கட்சியின் பொருளாதாரக் கொள்கையில் ஏதோ ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்படுத்தப்படும்; அந்த மாறுதல் காரணமாக, மச்சு வீட்டுக்காரனும், குச்சு வீட்டுக்காரனும் சமதையான ஒரு நிலையில் மாற்றி அமைக்கப்பட்டு, ?ஜனநாயக சோஷலிசம் செயற்படுத்தி வைக்கப்படும் என்றெல்லாம் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் ஏடுகள் பெரிய பெரிய எழுத்துக்களில் நீண்ட நெடுந் தலைப்புக்களிட்டு செய்திகள் வெளியிட்டன.

இதற்காகவே தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக இருந்துகொண்டு படாத பாடுபட்டுக் கொண்டிருக்கும் திரு. சுப்பிரமணியமும், முதுபெரும் காங்கிரசுக்காரர் சாதிக்அலியும் ஒரு நகல் தீர்மானம் தயாரிக்கிறார்கள் என்றும் செய்திகள் வெளிவந்திருந்தன.

திரைப் படத் துறையில் முன்னணியில் இருக்கும் ஒரு இளம் நடிகருக்கோ, அல்லது நடிகைக்கோ காதல் திருமணமாக இருந்தாலும், அல்லது களவுத் திருமணமாக இருந்தாலும். கற்பு நெறித் திருமணமானாலும் எப்படி பிரபலப்படுத்தப்பட்டு செய்திகள் தரப்படுகின்றனவோ அப்படி சுப்பிரமணியம்—சாதிக்அலி இவர்களது கூட்டுத் தயாரிப்பான பொருளாதாரத் திட்டம் பற்றி பிரபலப்படுத்தப்பட்டது.

கூட்டம் தொடங்கி ஒருநாள் வரையில், இந்த கூட்டுக் கொள்கை பற்றி செயற்குழு விவாதமும் நடத்தி இருக்கிறது! ஆனால் நண்பா! பரிதாபகரமான நிகழ்ச்சி! அந்தக் கொள்கை வீசியெறியப்பட்டு, அதனினும் வேகம் பொருந்திய—தீவிரமான—புரட்சிகரமான பகுதிகளைக் கொண்ட பிரதமரின் குறிப்புக்களோடு கூடிய ஒரு கொள்கை சவான் அவர்களால் தயாரிக்கப்பட்டு குழுவின் பரிசீலனைக்கு முன் வைக்கப்பட்டது.

சுப்பிரமணியனரது கொள்கைப்படி பாங்குகள் நாட்டுடைமை யாக்கப்பட வேண்டும்; சவான் அவர்களது கொள்கைப்படி சமூகக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டும்! இது சோஷலிச சமுதாயத்தை அமைப்பதற்கான படி என்றுதான் இருசாராரும் தெரிவித்திருக்கிறார்கள்.

மற்ற மற்ற கொள்கைகள் பற்றியவைகளைவிட, பாங்குகளை நாட்டுடைமை யாக்குவதா? சமுதாயக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதா என்பதிலேதான் முக்கியமான கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

சோஷலிச நெறிப்படி, நாட்டுடைமையாக்க விடமாட்டேன் என்று துணைப் பிரதமர் மொரார்ஜி தேசாயும், எஸ் கே. பாட்டிலும் உரத்தக் குரலில் கூறி இருக்கிறார்கள். சவான் அவர்களது ‘சமூகக் கட்டுப்பாடு’ கொள்கை முன்வைக்கப்பட்ட பின்பு, அதே துணைப் பிரதமர், நாட்டுடைமை யாக்குவதற்கும் சமூகக் கட்டுப்பாட்டிற்கும் அதிக வேறுபாடு இல்லை என்று விளக்கமளித்திருக்கிறார்!

> “பாங்குகளை நாட்டுடைமை யாக்கினால், கட்சியையே பிளவுபடுத்திவிடுவேன்.”

என்பதாக எஸ். கே. பாட்டில் சிம்மக் குரல் கொடுத்திருக்கிறார்! சினம் தெரிகிறது அந்தப் பேச்சில்! சிந்தையும் புரிகிறது!

## அடுத்த இதழில்

# அறிஞர் அண்ணா

அவர்களின்

# மிரட்டல்! விரட்டல்!

என்ற தம்பிக்கு மடல் இடம்பெறும்.

"அதைச் செய்தே தீருவேன்."

என்று பதிலுக்கு முன்னவர் குரல் தொனித்த வேகத்தில் கொஞ்சமும் குறையாமல் பதிலளித்திருக்கிறார், பிரதமர். அதாவது 'நாட்டுடைமை யாக்கியே தீருவேன்' என்று தெரிவித்திருக்கிறார். கட்சி பிளவுபடுத்தப்பட்டாலும், அழிவுத் திசையை நோக்கி அழைத்துச் செல்லப்பட்டாலும் 1972 வரையில் காங்கிரஸ்தான் மத்திய அரசில் என்று நிலைமை இருக்கின்றவரையில் 'நாட்டுடைமையாக்கியேதான் தீருவேன்' என்று பொருள் கொள்ள முடியும் இந்தப் பதிலுக்கு.

ஆனால் நண்பா, மொரார்ஜிதேசாயோ, நிஜலிங்கப்பாவோ, பாட்டிலோ காங்கிரஸ்காரர்கள் ஆயிற்றே! அதுவும் இந்திராகாந்தியை மிக நன்றாக அறிந்தவர்களாயிற்றே!

ஒருவாறாக சுப்பிரமணியம்—சாதிக் அலி இவர்களது பொருளாதாரக் கொள்கை நகல் தீர்மானம் வீசியெறிப்பட்டு சவான் அவர்களது நகல்பற்றி விவாதம் ஏற்பட்டபோது, அதனைத் தயாரித்தவரும், பிரதமரின் முக்கியமான ஆதரவாளர் என்றும் கருதப்படும் சவான் அவர்களது குறுக்கீடு பெரும் அளவுக்கு ஏற்படவேண்டிய நிலைமை உருவாயிற்று.

நண்பா! இந்த செயற்குழுக் கூட்டம், பொருளாதாரக் கொள்கைபற்றி ஒரு முடிவெடுப்பது என்று மட்டும் கூட்டப்பட்டிருக்குமானால் வாதத்துக்காகவாவது ஒப்புக்கொள்ளலாம். உருப்படியான சில கொள்கைகளை வகுத்திருக்கிறது என்று. பொருளாதாரக் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து கூட்டப்பட்ட இந்தக் கூட்டத்தின் கவனத்தை, காங்கிரசின் எதிர்காலம்—அப்படி முழுமையாக ஆக்கிரமித்துக் கொள்ளும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

மத்திய அரசின், காங்கிரஸ் கட்சியின் தலைமையின் மிக முக்கிய கவலை, அடுத்துவரும் முக்கியமான ஆண்டுகளில்—நெருக்கடி மிகுந்ததவையாயிருக்கக் கூடும் என்று அஞ்சுகின்ற அளவுக்கு காங்கிரசுக் கட்சியே அடியோடு புதையுண்டு போய்விடக் கூடும் என்று கவலைப்படுகின்ற அளவுக்கு முக்கியமான பிரச்னை அது.

> "1972-க்குப் பிறகு காங்கிரஸ் கட்சி—மத்தியிலும் புறக்கணிக்கப்பட்டுவிட்டால், அப்புறம் அதிகாரபலம் கொண்டு தூக்கி நிறுத்திடத் தக்க அளவுக்கு இனி வரவிருக்கின்ற குடியரசுத் தலைவர் இருக்கவேண்டும்"

என்ற கவலை குடையும்போது பொருளாதாரத் திட்டமாவது—பெரியார் மொழிப்படி—வெங்காயமாவது!

> காங்கிரசுக் கட்சியையே பிளவுபடுத்திவிடுவேன்

என்று பாட்டில் கூறுவதற்கு, எதிர்காலத்தில் அப்படி கட்சியைப் பாதுகாத்து வைக்கவேண்டாமா? அந்த எண்ணத்திலே காங்கிரசுக் கட்சியின் பார்லிமெண்டரி போர்டு சிந்திக்கத் தொடங்கி இருந்த வேளையில் பாவம், பிரதமர் ஆழந்தெரியாமல் காலை விட்டுவிட்டார்!

> குடியரசுத் தலைவர் பதவிக்கு இப்போதைய தற்காலிகக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரிதான் நிறுத்தப்பட வேண்டும்

என்று தம் வேட்கையை வெளியிட்டிருக்கிறார். பார்லிமெண்டரி போர்டு கிரியைப்பற்றி ஏற்கெனவே திட்டவட்டமான முடிவுக்கு வந்திருக்கிறது — அவர் கூடாதென்று.

தினமணி சொல்கிறது—

> "இன்றுகாலை வரையில் யாரை நிறுத்துவது என்ற விஷயத்தில் மெம்பர்களிடையே கடும் கருத்து வேற்றுமை இருந்தது; ஆனால் இன்று போர்டு கூடி நாற்பது நிமிடங்களுக்குள் பெயரை முடிவு செய்தது!

என்று. நாற்பது நிமிடங்களுக்குள்ளே செய்யப்பட்ட முடிவுதான் சஞ்சீவி ரெட்டி என்பது.

பிரதமர், கிரியின் பெயரைக் கூறியபோது ஆதரவு காட்டவில்லை என்பதை அறிந்தவுடன், இப்போதைய உணவமைச்சர் ஜகஜீவன்ராம் அவர்களை வேட்பாளராக இருக்கச் செய்யவேண்டும் என்று அவரது பெயரையே பிரேரேபித்துமிருக்கிறார்.

பிரச்னை சூடேறி, கடும் வாக்குவாதம் நடைபெற்றது. இந்தக் கட்டத்தில் நண்பா, சவான் அவர்களது நிலை மிகவும் தர்மசங்கடமாக அமைந்துவிட்டிருக்கிறது.

குடியசுத்தலைவர் பதவிக்கு ஒருவர் தேவை என்ற நிலையேற்பட்டது முதல் பிரதமர் அவர்களது இதயத்தை நிரப்பிக்கொண்டிருந்தவர் கிரியே யாகும்; அவருக்கு மாற்று அபேட்சகர்தான் ஜகஜீவன்ராம். கிரியை, பார்லிமெண்டரி போர்டு ஏற்கவில்லையென்றால், காந்தியடிகளுக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்துக்கு காந்தியத்தத்துவத்தின்படி ஒரு அரிஜனை அந்த இடத்தில் அமரவைப்பது சாலப் பொருந்தும் என்பது பிரதமரது நம்பிக்கை.

அல்லாமல், பிரதமரது விளக்கப்படியே பார்த்தாலும் ஒவ்வொரு முக்கியப் பிரச்னைக்கும் தாம் குடியரசுத் தலைவருடன் நெருங்கிய தொடர்புகொள்ள வேண்டியிருக்கும்; அதற்காக, தமக்கு இணக்கமான ஒருவரே அப்பதவிக்கு வரவேண்டும் என்ற கருத்தை பார்லிமெண்டரிபோர்டு நிராகரித்திருக்கத் தேவையில்லை.

சவான் இரங்கத்தக்க நிலைக்கு இது ஒரு அறை கூவலாக ஆகிவிட்டது. நண்பா, சஞ்சீவரெட்டியை ஆதரித்து திருவாளர்கள்—

மொரார்ஜி தேசாய்,<br>
எஸ். கே. பாட்டில்,<br>
காமராசர்,<br>
சவான்

ஆகிய நான்குபேர் வாக்களித் திருக்கிறார்கள். பிரதமர் விரும்புவது ஜெகஜீவன்ராமை என்று தெரிந்திருந்தும், சஞ்சீவரெட்டிக்கு வாக்களிக்க வேண்டிய நிர்ப்பந்தத்

லக்கும் ஆட்படுத்தப்பட்டிருக்கிறார் சவான். பிரதமரது நம்பிக்கைக்கும், விருப்பத்துக்கும் மாறாக அவரது நெருங்கிய சகாவான அவர், அப்படி ஏன் நடந்துக் கொள்ள நேரிட்டது என்பதற்கு அவரே காரணம் காட்டுகிறார்:

> "பிரதம மந்திரிக்கும், தமக்கும் மேலிடத் தலைவர்கள் நேற்று காட்டிய சமிக்ஞைக் குப் பதில் சமிக்ஞை காட்டுவது அவசிய மாகிவிட்டது.

இது தான் காரணமாம்! சவானுக்கு! பிரதமருக்கு எதிராகத் தான் இயங்கவேண்டிய நிலை, முதல் நாளே யேற்பட்டுவிட்டது என்கிறார். அதுவும், பதில் சமிக்ஞை யாகத்தான் அப்படி நடந்துகொள்ள வேண்டியதாகி விட்டது என்கிறார். அவர் குறிப்பிடும் 'நேற்று' நிலையென்ன?

> நேற்று காட்டிய சமிக்ஞைக்குப் பதில் சமிக்ஞை

சஞ்சீவ ரெட்டியை ஆதரித்து வாக்களிப்பது. பிரதம ருக்கு எதிராக வாக்களிப்பது. ஆனால் நேற்று என்ன?

1. பிரதமரின் குறிப்போடு கூடிய, சவான் தயாரித் தளித்த பொருளாதாரக் கொள்கை, பெரும் பாலோரால் எதிர்க்கப்பட்டது.
2. சிறப்பாக, எஸ். கே. பாட்டிலும் காமராசரும், மொரார்ஜியும் அதனை எதிர்த்தார்கள்,
3. அவர்களை, ஒப்புக்கொள்ளச் செய்யவேண்டிய கட்டாய நிலை சவானுக்கு ஏற்பட்டது.
4. நாளைய (அதாவது குடியரசுத் தலைவர் பத விக்கு அபேட்சகர் பிரேரேபித்தல்) நிலை நினைவு கூறப்படுகிறது.
5. 'நாளைய நிலையில் தங்களுக்கு ஆதரவாக நான் இருப்பேன்' என்று தெரிவிக்கவேண்டிய நிர்ப் பந்தம் ஏற்பட்டது.
6. அதனால் பாட்டிலும், மொரார்ஜியும், காமராச ரும் வேண்டா வெறுப்பாக சவான் திட்டத்தை ஏற்றார்கள்.
7. குடியரசுத் தலைவர் பதவி, தங்கள் அபேட்ச கருக்குத் தரவேண்டும் என்பதற்காக அவர்கள் அதனை ஏற்றார்கள்.
8 அவர்கள் அதனை ஏற்கவேண்டும் என்பதற் காக, அவர்கள் குறிப்பிடும் வேட்பாளரை சவான் ஏற்றார்.

இதுதானே நேற்று காட்டிய சமிக்ஞைக்குப் பதில் என்பது. இது உள்ளபடி சவானுக்கு ஒரு அறைகூவல் தானே!

> பிரதமரையும், தன்னையும் மேலிடத் தலைவர்கள் ஒரு நிபந்தனையின் மீது ஆதரித் தார்கள்; அந்த நிபந்தனைக்குக் கட்டுப்பட வேண்டியதாயிற்று.

என்பதல்லவா சவானின் பேச்சிலிருந்து கிடைக்கிறது. நேற்றுகாட்டிய சமிக்ஞை என்பதிலிருந்து, பெரும்பான்மை யான அல்லது சஞ்சீவ ரெட்டியை ஆதரித்து வாக் களித்தவர்களுக்கு நேற்றே குடியரசுத்தலைவர் பதவிக்கு வேட்பாளர் யார் என்பது தெரிந்திருக்கிறது;

> முன்பே தெரிந்திருந்தும், அது பிரதம ருக்கு எடுத்துரைக்கப்படவில்லை.

அதோடு—

> 40 நிமிட நேரத்தில்தான் வேட்பாளர்பற்றிய முடிவு செய்யப்பட்டது என்பது பொய்க்கூற்று; ஜகஜீவன்ராமை ஏற்பது இல்லை என்பதும் முடி வான விஷயம்.

இதனை சவான் பிரதமரிடம் முன்பே எடுத்துரைத் திருக்கலாம். பிரதமரையும் நிலைமைக்கு ஏற்ப சரிப் படுத்தியிருக்கலாம். திடீரென்று அறிவித்தது — பின் விளைவுகளைக் கடுமையாக்கும் என்கிற அளவுக்குப் பிரதமர் பதிலிறுக்கும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக் காது.

இன்னொன்றையும் இங்கே கவனிக்கவேண்டும். குடியரசுத் தலைவராக வருபவர், கட்சி பேதங்களைக் கடந்தவராக இருக்கவேண்டும்; அனைத்துக் கட்சி யினரையும் அணைத்துச் செல்பவராக இருக்கவேண் டும் என்றும் பிரதமர் முன்னதாகவே தெளிவுபடுத்தி இருக்கிறார். சஞ்சீவ ரெட்டியின் பெயரை, ஏற்கெனவே எடுத்துக் காட்டியபோது. அவர் காலியாகவிட நேரும் இடத்தைப் பூர்த்தி செய்வது இன்னும் கடுஞ்சோதனைக்குரிய தாக இருக்கும் என்று கருத்தறிவித்திருப்பதனைப் புறக் கணித்துவிட முடியாது. இப்போது நாடாளுமன்றத் தின் அவைத் தலைவராக இருப்பதிலிருந்து, அவர் வில கினால், அவைத் தலைவராக இன்னொருவரைத் தேர்ந் தெடுப்பதிலே மிகுந்த சிரமப்பட வேண்டியிருக்கும்.

## உண்டு—ஆனால், இல்லை!

—புலவர். மு. இரத்தினம்

மண்ணுக்குள் பொன்னுண்டு முற்றி விட்ட
மரத்துக்குள் வைரமுண்டு மேலே உள்ள
விண்ணுக்குள் விதவிதமாய் மீனும் கோளும்
விந்தையளித் திருப்பதுண்டு முகத்தி லுள்ள
கண்ணுக்குள் ஒளிகவரும் பாவை உண்டு
கடலுக்குள் முத்துண்டு ஆனால் எங்கள்
எண்ணத்துள் என்றென்றும் 'அண்ணா' உன்றன்
எழில்மிகுந்த மூன்றெழுத்து மட்டும் உண்டு.

பூமணம்உன் பேச்சிலுண்டு பரணிப் பாட்டின்
போர்முரசும் எழுத்திலுண்டு நாவி னுக்கும்
தேமணம்உன் செயலிலுண்டு மெய்சி லிர்க்கும்
தென்றல்உன் விழியிலுண்டு புராணம் கூறும்
வாமனன்போல் உருவமுண்டு நாட்டை என்றும்
வாழவைக்கும் திறமையுண்டு நாளும் உன்றன்
நாமலரில் தமிழுமுண்டு நாட்டு மக்கள்
நரம்புகளில் குருதியினில் நீதான் உண்டு.

பொறுமையுன்றன் புலனிலுண்டு பகையைக் கண்டு
புன்னகைக்கும் இதழ்களுண்டு தமிழர் வாழ்வில்
சிறுமைகண்டால் துடித்தெழுந்தே அதனை எல்லாம்
சீர்திருத்தும் எண்ணமுண்டு நாட்டி லுள்ள
வறுமைகண்டு துயர்கொண்டு தாயைப் போலே
வருந்துகின்ற உள்ளமுண்டு தாய்மொ ழிக்குச்
சிறுமைவந்தால் பொங்கியெழும் இதய முண்டு
சீறியெழும் படைவரிசை உன்பின் உண்டு.

சொத்தெல்லாம் இழந்ததுண்டு மெய்வ ருந்தச்
சுகத்தினையும் இழந்ததுண்டு மிஞ்சி யுள்ள
அத்தனையும் இழந்தபோதும் எங்க ளுள்ளம்
அமைதியினை இழந்ததில்லை அண்ணா! மீளா
நித்திரையில் நீஆழ்ந்த பின்னர் இங்கே
நீர்வீழ்ச்சி கண்ணிலுண்டு தீராச் சோக
முத்திரைதான் நெஞ்சிலுண்டு துன்ப மேக
மூட்டம்தான் நாட்டவரின் முகத்தி லுண்டு.

காங்கிரசின் நிலையும் அப்படி இருக்கிறது என்பதும்தான் இதன் பொருள்.

இதனையும் பார்லிமெண்டரி போர்டு அலட்சியம் செய்திருக்கிறது. வருங்காலத்தில் காங்கிரஸ் காப்பாற்றப்பட வேண்டும் என்ற நம்பிக்கையைத் தவறானது என்று யாரும் கூறமுடியாது. ஆனால் குடியரசுத் தலைவர் போன்ற ஒரு பெரிய பதவியில் அமர்வோர்' கட்சிக் கண்ணோட்டத்துடன் செயல்பட முடியாது—கூடாது என்ற வகையிலே பார்லிமெண்டரிபோர்டு சிந்தனை செலுத்தவில்லை.

இப்போதைய நாடாளுமன்றத் தலைவராக சஞ்சீவ ரெட்டி பதவியேற்றது முதல் நடுநிலை பிறழாதவராக இருக்கிறார் என்று காமராசர் சான்றிதழ் கொடுத்திருக்கிறார். ஆனால், அந்த நடுநிலை பிறழாதவரை, நடுநிலை பிறழ்ந்து காங்கிரசைக் காப்பாற்றவேண்டும் என்பதற்காகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்களோ என்றும் சந்தேகம் எழுவது தவறானதாக இருக்கமுடியாது. இதனை ஊர்ஜிதம் செய்வது போலவே—

> "ராஷ்டிரபதி பதவி கட்சிப் பதவியல்ல—
> எனவே, பொதுக் கருத்தறிந்து அதற்கேற்ப
> ஒரு வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கப் பாடு
> பட்டு வந்துள்ளேன்; தவிர, நாட்டில் வேறு
> கட்சிகளைச் சேர்ந்த சர்க்கார்களும் இருந்து
> வருகின்றன"

என்று பிரதமர் செய்தியாளர்களது வினாக்களுக்குப் பதில் தந்திருக்கிறார். அதாவது சஞ்சீவி ரெட்டியின் தேர்வு, இந்த நிலைமைகளுக்கு எதிரானதாக இருக்கும் என்பது கணிப்பு. இந்த முடிவு, அவருக்கு வேதனை தரத்தக்கமுடிவு ஆகும், அவரே ஒப்புக்கொண்டுள்ளபடி. பிரதமர் விருப்பப்படி கட்சி நிலை கடந்தவராக ஒருவர் இருக்கவேண்டும் என்பதனை, தற்காலிகக் குடியரசுத் தலைவரும், சுயேச்சை வேட்பாளராகவும் ஆகிவிட்ட வி. வி. கிரியும் நிலை நாட்டுகிறார். தெளிவாகவும் எடுத்துக்காட்டுகிறார்.

இந்த அச்சங்கள் அனைத்தும் அவசிய மற்றவை என்றோ, பிரச்னைக்குரியவை அல்லவென்றோ ஒப்புக் கொள்ள முடியாது.

ஆக, கூட்டத்தின் முடிவு, எந்தப் பொருளாதாரக் கொள்கையை வகுக்க வென்று கூட்டப்பட்டதோ, அந்தப் பொருளாதாரக் கொள்கை முக்கியத்துவம் பெறவில்லை.

மொரார்ஜி தேசாயின் விமர்சனப்படி, இதில் புதியது ஒன்றுமில்லை—ஏற்கெனவே செய்யப்பட்டுள்ள முடிவுகளைத்தான் புதிய கொள்கை என்றபேரால் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

ஆந்திராவைச் சேர்ந்த செங்கல்வாராய நாயுடு என்பார்—

> "இதேபோன்ற தீர்மானங்கள் பல, ஏற்
> கெனவே நிறைவேறி இருக்கும்போது, புதி
> தாகப் பொருளாதாரத் தீர்மானம் எதற்கு
> என்று புரியவில்லை"

என்று கேட்டிருக்கிறார். மொரார்ஜியே பதில் கூறி இருக்கிறார்.

> காங்கிரஸ் கட்சியினரே, பல சமயங்
> களில் இதுபோன்ற ஐயப்பாடுகளைக் கிளப்பு
> கிறார்கள்; சோஷலிச அமைப்புபற்றிய ஐயத்
> தைக் கிளப்புகிறார்கள்; அதனால், மீண்டும்
> மீண்டும் கொள்கையைப் புதுப்பித்துக்
> கொள்ள வேண்டி யேற்படுகிறது—என்று.

சூடாகப் பதில் தந்திருக்கிறார், ஆந்திரத்து உறுப்பினர்—செங்கல்வராய நாயுடு.

> "ஒரு கொள்கையை அல்லது
> தீர்மானத்தை ஒரு அமைச்சரவை
> செயல்படுத்த முடியவில்லை யென்றால்,
> அந்த அமைச்சரவை விலகிக்கொண்டு,
> செயல்படுத்தக்கூடிய புதிய அமைச்ச
> ரவை அமைய வழிசெய்ய வேண்டும்."

என்று கூறி இருக்கிறார். பழைய கொள்கைகளையே மீண்டும் மீண்டும் புதிய வடிவத்தில் கொண்டு வந்து காட்டும் ஏமாற்று வேலை இனி வேண்டாம்; மரியாதையாகப் பதவியை விட்டு ஓடுங்கள்; புதிய முற்போக்காளர்களுக்கு வழி விடுங்கள் என்று கேட்டதாகத்தான் பொருள் கொள்ள முடியும்.

இதுபோன்ற எச்சரிக்கைகளை யெல்லாவற்றையும், ஏதோ தீர்மானம் என்பதன் பேரால் கண்துடைப்புச் செய்துவிட்டு, குடியரசுத் தலைவர் பதவிக்கு வேட்பாளர்—என்ற செய்தியோடு கூட்டம் முடிவடைந்து விட்டது.

பிரதமர், கிரியே தலைவராக இருக்கவேண்டும் என்கிறார்—இல்லையானால் ஜெகஜீவன்ராமைத் தேர்ந்தெடுங்கள் என்கிறார்.

போர்டு, சஞ்சீவ ரெட்டியைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. வேதனையாக இருக்கிறது இது பிரதமருக்கு. சவானும் காலை வாரி விட்டிருக்கிறார். அப்படி அவர் செய்யாதுபோனால், தன் நகல் தீர்மானமும், பிரதமரின் குறிப்பும் காலைவாரி விடப்பட்டிருக்கும் என்று சமிக்ஞை காட்டுகிறார்.

> காங்கிரசின் அதிகார பூர்வமான வேட்
> பாளர் சஞ்சீவ ரெட்டிதான் என்றாகிவிட்டது.

பிரதமரைத் திருப்தி செய்ய மேலிடத்தார் முயன்று கொண்டிருக்கிறார்கள்; ஒரு சாரார் போர்டு முடிவை மாற்ற முடியுமா என்பதிலே முயன்று வருகிறார்கள்.

> பாட்டில் மாறப் போவதில்லை;
> மொரார்ஜியையும் மாற்ற முடியாது;
> சவான் நிலையோ பரிதாபத்திற்குரியது.
> காமராசர் ஒருவர் இருக்கிறார். அவர்
> எப்படிப்பட்டவர் என்பது அ...லம் அறிந்த
> உண்மை.

எனவே, நண்பா, இத்தியாதியான நிலைமைகளால் நாட்டில் பேரிரைச்சல் கேட்டுக் கொண்டிருக்கிறது. புயலும் வரலாம்! பூகம்பமும் ஏற்படலாம்! குமுறலோடு அடங்கியும் போகலாம்! ஆனால் மக்கள் கண்துடைப்புப் பொருளாதாரக் கொள்கைக்கும், சோஷலிசக் கூச்சலுக்கும் மட்டுமே தயாராக்கப்படுவது மட்டும் பயன் தராது; தரப்போவதுமில்லை, அதனால் காங்கிரசுக் கட்சி காப்பாற்றப்படும் என்றும் நம்ப முடியவில்லையே!

அன்புள்ள,

**திருவாரூர் முத்துராமன்**

ஆசிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம் ... அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.